உ

கணபதி துணை.

துரைசாமிப்பாவலரவர்கள்

சேண்டத்தூர்

ஐயாத்துரைமுதலியாரவர்கள்பேரில்

இயற்றிய

நாணிப்புறங்காட்டலென்னும்

ஒருதுறைக்கோவை

மூலமும்,

காவை. ராஜூநாவலரவர்கள் செய்த

உரையும்.

இவை

இந்நூலாசிரியர் குமாரர்

ஞானகுரு ஆசாரியவர்களால்

சென்னை:

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டன.

1912.

விலை அணா 6.

[Copyright Registered.]

உ

கணபதிதுணை.

சேண்டத்தூர்

ஐயாத்துரை முதலியார்பேரில்

ஒருதுறைக்கோவை

மூலமும் உரையும்.

நாணிப் புறங்காட்டல்.

தலைமகன் நெருங்கிவரக்கண்ட தலைமகள் நாணி முதுகுகாட்டி நிற்கக்கண்ட தலைமகன் சொல்லியது.

பூமேவு வல்லிமன் மார்பலங் காரனப் பொன்னகரின்
காமேவு செண்டைமன் னையாத் துரையின் கனகவெற்பீர்
தூமேவு மும்மத வாரணந் தன்னைத் துதித்துபின்னால்
மாமேவு வண்முரு கேசரைப் போற்றுவன் மாண்புறவே.

(இதனதுபதப்பொருள்.) பூமேவு-தாமரைமலரில் வீற்றிராநின்ற, வல்லி-இலக்குமி, மன் - பொருந்திய, மார்பலங்காரன் - மார்பலங்காரத்தையுடையவன், அப்பொன்னகரின் - அந்ததேவலோகத்தினது, கா மேவு - பஞ்சதருக்களையொத்த, செண்டை மன் ஐயாத்துரையின் - செண்டை மன்னனாகிய ஐயாத்துரையென்னும் பிரபுவினது, கனகவெற்பீர் - பொன்மலையில் உள்ளவரே, தூமேவு மும்மதவாரணந்தன்னை - பரிசுத்தமாகிய மும்மதத்தோடுங்கூடிய யானைமுகக்கடவுளை, துதித்து - நமஸ்கரித்து, பின்னால்-அதன்பிறகு, மா மேவு-அழகுவிளங்குகிற, வள்-அருளாகிய வள்ளன்மையுடைய, முருகேசரைப் போற்றுவன் - சுப்பிரமணியரை நமஸ்கரிப்பேன், மாண்புற - மாக்ஷிமை பெறும்பொருட்டு, என்றவாறு. ஏகாரமீற்றசை.

ஆடவரைப் புருடோத்தமனென்று சிறப்பிக்கு முறைமைபற்றி, ஈண்டு 'பூமேவு வல்லிமன் மார்பலங்காரன்' என்றும், வரையாதுகொடுக்கும் வள்ளன்மைபற்றி பஞ்சதருக்களுக்கு ஒப்பாகவும்சொல்லப்பட்டது. மும்மதவாரணம்-மும்மதம்பொருந்திய யானையினது கொம்பைப்போன்ற கொங்கை. பின்-பின்பக்கமாக. நால்-தொங்குகிற. முரு-வாசனைபொருந்திய. கேசர்-கூந்தல். முருகு எனற்பாலது முரு எனக் கடைகுறைந்தது. கேசம் எனற்பாலது கேசர் எனத் திரிந்தது, எனவே முன்பு யோகத்திற்குரித்தாகிய கொங்கைகளைக்கண்டு பின்

புறமாகிய கூந்தலைப் பின்பு காணலாம் என்பதுகருத்து. இச்செய்யுளில் விநாயக வணக்கமும், சுப்பிரமணியர் வணக்கமும் கொள்ளக்கிடக்கின்றமைகாண்க.

முனமான் பொருட்டேக மாதைக் கவர்ந்தவன் மொய்த்தகுலைப்
பனைபோற் சிரங்கொய்த மானிக ரையாத் துரைப்பறம்பில்
மனுராம லிங்கேசர் தாள்கண்டு பர்வத வர்த்தனியை
நனிகாண்ட லுந்தகு மேமட மாமயி னங்கையரே.

(இ-ள்.) முனம் - முற்காலத்தில், மான்பொருட்டு ஏக - மாரீசனென்னும் மானைப் பிடிக்கும்பொருட்டாகச் செல்ல அதுசமயம், மாதை - சீதா பிராட்டியை, கவர்ந்தவன் - திருடிக்கொண்டுபோன இராவணனது, மொய்த்த பனைகுலைப்போல்-அடர்ந்த பனங்காய்க்குலையைப்போல, சிரம் கொய்த - தலைகளையறுத்த, மால் - ஸ்ரீராமரை, நிகர் - ஒப்பாகிய, ஐயாத்துரை பறம்பில் - ஐயாத்துரையென்னும் பிரபுவினது மலையில், மன்னு - நிலைபொருந்திய, ராமலிங்கேசர் தாள் கண்டு - ராமலிங்கேசரது பாதங்களைத் தரிசித்து, பர்வத வர்த்தனியை - பர்வதவர்த்தனியம்மையாரை, நனி காண்டலும் தகும்-மிகவுங் காண்டலுந்தகும், மடம் - இளமைபொருந்திய, மா - அழகிய, மயில் - மயில் போன்ற, நங்கையரே - பெண்ணிற்சிறந்தவளே, எ-று.

ராமலி கேசம் எனற்பாலது ராமலிங்கேசர் என்றாயது; இருள் மலிந்த கேசம் என்பது பொருள். கேசம் - கூந்தல். தாள் - பதம். பர்வதவர்த்தனம் எனற்பாலது பர்வதவர்த்தனி என்றாயது, பருவதம்போல் அழகுடைய தனம் என்பதுபொருள். எனவே, முன்பு கூந்தலைக்கண்டு பிறகு போகத்துக்குரித்தாகிய முலைகளைக்காண்பதுவும் நன்றென்பது கருத்து. இச்செய்யுளில் முன்பு சுவாமியை தரிசித்துப் பின்அம்மனை தரிசித்தலின் முறைமை விளங்கக் கிடக்கின்றமை காண்க. (௨)

சோமனைக் காமனைச் சூடினன் காய்ந்தவன் றாயபைம்பொற்
றாமரைத் தாள்பணி ஐயாத் துரையின் றடங்கிரிபால்
ராமனைக் கண்டனன் சீதையலக்கு மணனைக்கண்டால்
மாமனை யொத்த படங்கொண்டு போற்றுவன் மாதரசே.

(இ-ள்.) சோமனை காமனை சூடினன் காய்ந்தவன் - சோமனை சூடினவனும் காமனை எரித்தவனுமாகிய சிவபிரானது, தூய - பரிசுத்தமாகிய, பைம்பொன் - பசிய பொன்போன்ற, தாமரைத்தாள் - தாமரைமலர்ப் பாதங்களை, பணி - தொழுகின்ற, ஐயாத்துரையின் - ஐயாத்துரையென்னும் பிரபுவினது, தடங்கிரிபால் - விசாலமாகிய மலையின்கண், ராமனை கண்டனன் - ஸ்ரீராமனைக் கண்டனன், சீதையை - சீதாதேவியை, லக்குமணனை - லக்ஷ்மணனை, கண்டால் - பார்த்தால், மாமனையொத்து - மாமனைப் பொருந்தி, அ படங்கொண்டு - அம்மூவர்களுடைய படத்தைப் பெற்று, போற்றுவன் - துதிப்பேன், மாது அரசு - ஏ பெண்கள்நாயகி, எ - று.

ரா மனை-இருட்டுக்கு வீடாகிய கூந்தல். சீ தையை - சிறந்த கருணை. லக்கு-ஒப்பு. மணன் - விவாகம். மணம் எனற்பாலது மணனென்றாயது. மாமனை -

இலக்குமி வீடாகிய தாமரைமலர். படம் - அரவின்படம். தாமரைமலரைப் போன்று அரவின்படத்தை யொத்த அல்குல்; எனவே, கூந்தலின் வளத்தைக் கண்டேன்; நினது சிறந்த தயவும், பொருந்திய காந்தர்வ விவாகத்தையுங் கண்டால் அல்குலின்பத்தைப் பெறுவேன் என்பது கருத்து. ராமன் சீதை லக்ஷ்மணன் என்னும் பொருளினிமையுங் காண்க. (௫)

செந்தா மரைநேர் முகவலங் காரன் றிருத்தமிழ்க்கு
வந்தா தரிக்கு மன் னையாத் துரையின் வரையணங்கே
அந்தாதி யோதி முடித்த தறிந்தே னவனிபுகழ்
சிந்தா மணிமே கலையொள் கலம்பகஞ் செப்புவையே.

(இ-ள்.) செந்தாமரை நேர் முகவலங்காரன் - செந்தாமரைமலருக்கொப்பாகிய முக அலங்காரத்தை யுடையவன், திரு தமிழ்க்கு - அழகிய தமிழ்க்கு, உவந்து - ஆசைகொண்டு, ஆதரிக்கும் - புலவர்களை ஆதரிக்கின்ற, மன் - அரசன், ஐயாத்துரையின் - ஐயாத்துரையென்னும் பிரபுவினது, வரையணங்கே - மலையில்வாழும் தெய்வப்பெண்போன்றவளே, அந்தாதியோதி முடித்தது அறிந்தேன் - அந்தாதி என்னும் நூலைப்படித்ததை யறிந்துகொண்டேன், அவனி புகழ் - பூமி புகழ்கின்ற, சிந்தாமணி - சிந்தாமணி, மேகலை - மணிமேகலை, ஒள் கலம்பகம் - ஒள்ளியகலம்பகம், செப்புவை - சொல்லுவாய், எ-று.

அம் தாது இ ஓதி - அழகிய மகரந்தத்தோடுங் கூடிய இந்தக் கூந்தலை, முடித்தது அறிந்தேன் - முடித்திருக்கும் அழகைத் தெரிந்துகொண்டேன்; சிந்தாமணி மேகலை ஒள் கலம் பகம் - தேவமணியாலாகிய மேகலையென்னும் ஒள்ளிய ஆபரணம் அணிந்த அல்குல், செப்புவை - சொல்லித்தருவாய்; எனவே, கூந்தல் முடித்துவிட்டது கண்டேன், ஆபரணமணிந்த அல்குலைக் காட்டுவாய் என்பது பொருள். சிந்தா மணி மேகலை - இடையிலுள்ள மணியென்பது சிந்தாமணிக்கும், மணிமேகலைக்கும் பொருந்திநிற்றலும் ஓர் அழகாம். (௪)

புளகாங் கிதங்கொண் டறிஞர் தமிழ்க்குப் பொருளுதவும்
வளகார் நிகர்க்கர னையாத் துரையின் வரையின்மனம்
இளகா தனங்களை யென்னேர மிச்சித் திருக்குமெனக்
களகா புரிதனைக் காட்டி னதுநல் லதிசயமே.

(இ-ள்.) புளக அங்கிதங்கொண்டு - மகிழ்ச்சியாகிய அடையாளத்தைக் கொண்டு, அறிஞர் தமிழ்க்குப் பொருள் உதவும்-வித்துவான்களுடைய தமிழ்ப்பாக்களுக்கு திரவியசகாயஞ்செய்யும், வளம் கார் நிகர் கரன்-வளத்தைத்தருவதாகிய முகிலுக்கொப்பாகிய கையையுடையவன், ஐயாத்துரையின் - ஐயாத்துரையென்னும் பிரபுவினது, வரையில் - மலையின்கண்ணே, மனம் இளகா - மனம் உருகி, தனங்களை - ஐசுவரியங்களை, என்னேரம் - எக்காலமும், இச்சித்து - எண்ணி, இருக்கும் எனக்கு - இருக்கின்ற எனக்கு, அளகாபுரிதனை காட்டினது - அளகாபுரியென்னுங் குபேரனது பட்டணத்தைக் காட்டிவிட்டது, நல்ல அதிசயம் - நல்ல அதிசயம்; ஏ-என்னவியப்பு, எ-று.

தனங்களை - கொங்கைகளை. அளகபுரி-அளகாபுரி; கூந்தலை மூன்றாகப் பிரித்துப் பின்னியது. கொங்கையின் இன்பம்பெற வந்தேனுக்குக் கூந்தலைக் காட்டல் நன்றன்றென்பதாம். (௫)

விடங்காட்டு கண்ட னடியார் மனத்தின் விதம்புரியுந்
திடங்காட் டிடவந்த வையாத் துரையின் சிலம்பிலுந்தன்
மடங்காட்டி யென்கையக் கும்பத்தைத் தந்து மணமிலகும்
தடங்காட்டி மற்று புறங்காட்டிற் காண்குதுந் தாழ்குழலே.

(இ-ள்.) விடம் காட்டு - விஷத்தைக் காட்டிய, கண்டன் - திருநீலகண்டத்தையுடைய சிவபிரானது, அடியார் - தொண்டர்களது, மனத்தின் விதம் புரியும் - மனதில் நினைத்தவண்ணம் நடாத்துகின்ற, திடம் காட்டிட வந்த - த்ருடத்தைக் காண்பிக்கும்படி அவதரித்த, ஐயாத்துரையின் - ஐயாத்துரை யென்னும் பிரபுவினது, சிலம்பில் - மலையில், உந்தன் மடம் காட்டி-உன்னுடைய மடத்தைக் காட்டி, என் கை - எனது கையில், அ கும்பத்தை - அந்தக் குடத்தை, தந்து-கொடுத்து, மணம் இலகும் - வாசனைபொருந்திய, தடம் காட்டி-குளத்தைக்காட்டி, மற்று - மற்ற, புறம் காட்டில் காண்குதும் - வெளிவளத்தைக்காட்டினுல் பார்க்கலாம், தாழ் குழலே - தாழ்ந்த கூந்தலையுடையவளே, எ-று.

உந்தன் மடங்காட்டி-உன்னுடைய இளமையைக்காட்டி. அக்கும்பத்தைத் தந்து - அந்த குடம்போன்ற ஸ்தனத்தைத் தந்து. மணமிலகும் தடம்-வாசனை பொருந்திய சுனைபோன்ற அல்குல். புறம் - முதுகு. உனது இளமைப்பருவத்தைக்காட்டி இருகொங்கைகளை என் கையிற் கொடுத்து அல்குலையுங் காட்டிப் பின்பு முதுகைக் காண்பித்தால் காண்பேன் என்பது கருத்து. (௬)

அன்றா லிருந்தொரு நால்வர்க் கரிய பொருளுரைத்தோன்
றன்றா ளிணைச்சொலு மையாத் துரையின் றடங்கிரிபால்
கன்றால் விளவெறிந் தோனிலத் தின்வளங் காணவந்தால்
நன்றா லிசைக்குங் கருவியைக் காட்டுத னன்னுதலே.

(இ-ள்.) அன்று ஆல் இருந்து - அன்றொருதினம் ஆலமரத்தடியில் வீற்றிருந்து, ஒரு நால்வர்க்கு-சனகாதி நால்வருக்கு, அரியபொருள் உரைத்தோன்- அரிதாகிய ஆகமத்தின் பொருளை யுரைத்தவனுகிய சிவபிரானது, தன் தாள் இணை சொல்லும்-தனது இரண்டாகிய பாதங்களைப் புகழ்கின்ற, ஐயாத்துரையின் - ஐயாத்துரை என்னும் பிரபுவினது, தடங்கிரிபால்-விசாலமாகிய மலையின்கண், கன்றால் விளவு எறிந்தோன்-பசுவினது கன்றினுலே விளாம்பழத்தையுதிர்த்த திருமாலினது, நிலத்தின் வளம் - நிலத்தினது வளத்தை, காண வந்தால் - காணும்படிவந்தால், இசைக்கும் கருவியைக் காட்டுதல் - அன்னுன் ஊதுங் கருவியைக் காட்டுதல், நன்று - நன்றாயிருக்கிறது, நல் நுதலே-அழகிய நெற்றியையுடையவளே, எ-று. ஆல் - அசை.

விஷ்ணுவினது நிலம் - காடு; முல்லை. முல்லையரும்பையொத்த நகையின்பம். இசைக்குங்கருவி - குழல். நகையின்பம் பெறவந்த எனக்கு கூந்தலைக் காட்டுதல் நன்றன்றென்பதாம். நால்வர் - சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர். (எ)

ஆதியு மம்பிகைப் பாதியு மாயவ னம்பொனடிப்
போதினைப் போற்றுமை யாத்துரைச் செம்மல் பொருப்பதனில்
வாதிடு காம வழல்கொடு நும்மிடம் வந்தனனென்
றோதியும் வெந்நீ ரளிப்பது மொக்குங்கொ லுத்தமரே.

(இ-ள்.) ஆதியும் - முதலும், அம்பிகைப் பாதியும் - உமாபிராட்டியார் உடலிற்பாதியும், ஆயவன் - ஆகியவனது, அம் பொன் அடி போதினை - அழகிய பொன்போன்ற பாதமாகிய மலரை, போற்றும்-துதிசெய்கின்ற, ஐயாத்துரைச்செம்மல்-ஐயாத்துரை என்னும் பிரபுவினது, பொருப்பதனில் - மலையின்கண்ணே, வாதிடு காம அழல்கொடு - வாதிடுகின்ற காம வெப்பத்தைக் கொண்டு, நும்மிடம்-உமதிடத்தில்,வந்தனன் என்று-வந்தேனென்று, ஓதியும்-சொல்லியும், வெந்நீர் அளிப்பதும் - வெந்நீரைக் கொடுப்பதும், ஒக்குங்கொல்-ஒப்புமோ, உத்தமரே - உத்தமரே, எ-று.

ஓதியும் - கூந்தலும், வெந் - முதுகையும், நீர் அளிப்பது - நீங்கள்கொடுப்பது. காமவெப்பத்தோடு வந்தவனுக்குக் கூந்தலையும் முதுகையுங் கொடுப்பது நன்றன்று என்பதாம். (அ)

கங்கு லகலக் கொடைக்கதிர் சீக்குங் கருணைமுகத்
திங்களை யாத்துரை வெற்பினி லோரெண் டிசைக்கிரியும்
மங்கும் படிக்குச் செயும்வலி கொண்டு மதர்த்திடுமா
தங்கமி லாதுபி னங்கத்தி லென்பயன் றாழ்குழலே.

(இ-ள்.) கங்குல் அகல - வித்துவான்களது வறுமையாகிய இருள் நீங்க, கொடை கதிர் சீக்கும்-ஈகையாகிய சந்திரிகையைவீசும், கருணை முகத்திங்கள்-கருணையோடுங்கூடிய சந்திரனாகிய முகத்தையுடைய, ஐயாத்துரை வெற்பினில் - ஐயாத்துரை பிரபுவினது மலையின்கண்ணே, ஓர் எண்டிசை கிரியும் - அஷ்டகுல பருவதங்களும், மங்கும்படிக்குச் செயும் வலி கொண்டு - கெடுதலுறும்படிக்குச்செய்யும் வல்லமையைக்கொண்டு, மதர்த்திடும் - கர்விக்கின்ற, மாதங்கம் இல்லாது - யானையில்லாமல், பின் அங்கத்தில் என் பயன் - மற்ற அங்கங்களாகிய ரததுரகபதாதிகளால் என்ன பயன், தாழ் குழலே-தாழ்ந்த கூந்தலையுடையவளே, எ-று.

மாதங்கம் - யானை; முலை. பின் அங்கம் - முதுகு. கலவிக்கு உரித்தாகிய ஸ்தனமில்லாமல் முதுகினால் என்னபயன் என்பது கருத்து. சதுரங்கத்தில் யானையே பிரதானமானதுபற்றி மற்ற அங்கங்களில் பிரயோசனமில்லையென்னும் பொருணயங்காண்க. (௯)

குருகார் வயற்செண்டை நன்னகர் வாசன் குரவைநின்று
வருகார் நிகர்க்கர னையாத் துரையின் வரையணையீர்

முருகார் பதியினைக் காட்டிய நீரொளி மொய்க்குமதன்
அருகார் வடமலைத் தன்னையுங் காட்டிடி லஞ்சலியே.

(இ-ள்.) குருகார் வயல் செண்டை - குருகுகள் சஞ்சரியாநின்ற செண்டத்தூரென்னும், நல் நகர் வாசன் - நல்ல நகரில் வசிப்பவன், குரவை நின்று - சமுத்திரத்தினின்றும், வரு கார் - வரும்படியாகிய மேகத்தை, நிகர் கரன் - ஒப்பாகிய கரத்தையுடையவன், ஐயாத்துரையின்-ஐயாத்துரையென்னும் பிரபுவினது, வரை அனையீர் - மலையையொப்பாகியவரே, முருகார் பதியினை காட்டிய நீர்-சுப்பிரமணியர் வாசஸ்தானமாகிய தணிகையைக் காட்டியருளிய நீரே, ஒளி மொய்க்கும் அதன் - சோதிரூபம்பெற்ற அதற்கு, அருகு - சமீபத்தில், ஆர் - பொருந்திய, வடமலை தன்னையும் - திருவேங்கடத்தையும், காட்டிடில் அஞ்சலியே - காட்டிவிட்டால் நமஸ்கரிப்பேன், எ-று.

முருகு - வாசனை, ஆர் - நிறைதல்; புஷ்பவாசனை நிறைந்திருக்கும் ஸ்தானம், கூந்தல். வடமலை - முத்துமாலைகளைத் தரித்த மலைக்கொப்பாகிய ஸ்தனம். (௧௦)

பூதி யணிந்திடு மெம்மான் பணிவிடைப் போற்றுதல்செய்
நீதி யமைந்தநல் லையாத் துரையி னெடுங்கிரியீர்
சோதி கலம்பகஞ் சொல்லிக் கொடாதுபின் சொல்லியவா
றோதி யுணர்ந்தே னுணரினு முள்ளுறை யோர்ந்திலனே.

(இ-ள்.) பூதி அணிந்திடும் எம்மான் - விபூதியைத்தரித்தருளும் எம்பெருமானது, பணிவிடை - திருத்தொண்டுகளை, போற்றுதல்செய் - வளர்க்கும்படியாகிய, நீதி - முறைமை, அமைந்த - அமையப்பெற்ற, நல் ஐயாத்துரையின் - நன்மைவாய்ந்த ஐயாத்துரையென்னும்பிரபுவினது, நெடுங்கிரியீர்-நெடியமலையிலுள்ளவரே, சோதி கலம்பகம் - உணர்வைத்தரும் கலம்பகத்தை, சொல்லி கொடாது - சொல்லித்தாராமல், பின் சொல்லியவாறு - பின்பு சொல்லித்தந்த வகை, ஓதி உணர்ந்தேன் - படித்தறிந்தேன், உணரினும் - அவ்வகையறிந்த போதிலும், உள்ளுறை - உள்ளுறைப்பொருளை, ஓர்ந்திலன் - அறிந்திலன், எ-று.

சோதி கலம் பகம்-ஒளிபொருந்திய மேகலாபரணத்தைத்தரித்த அல்குல். பின் - முதுகு. வாறு-வளமை. ஓதி - கூந்தல். உள்ளுறை - உள்ளெண்ணம். அல்குலின்பம் பெறவந்த எனக்கு முதுகையுங் கூந்தலையுங் காட்டியதால் உன்னுடைய எண்ணத்தை யான் தெரிந்திலேன் என்றபடி. (௧௧)

நலங்கொண்ட செந்தமிழ் வாணர் மகிழ நயந்துவிளை
நிலங்கொண் டளித்திடு மையாத் துரையி னெடுங்கிரியீர்
கலங்கொண் டியற்றிய செவ்வியுங் கார்பெறு முப்புரிசை
வலம்வந்த பின்னே மதராஜ பீடமும் வாய்ப்பதுவே.

(இ-ள்.) நலம் கொண்ட - பலவித அலங்காரங்களைக்கொண்ட, செந்தமிழ் வாணர் - செவ்விய தமிழ்வாணர்கள், மகிழ - மகிழும்படி, நயந்து - ஆசைப்

பெருக்கத்தோடு, விளை நிலங்கொண்டு அளித்திடும்-நன்குவிளையும் நிலத்தைக் கொண்டு கொடுக்கும், ஐயாத்துரையின் நெடுங்கிரியீர் -ஐயாத்துரையென் னும் சீமானது நெடியமலையிலுள்ளவரே, கலங்கொண்டு இயற்றிய - ஆயுதங்களைக் கொண்டு இயற்றுதல்செய்த, செவ்வியும் - அழகும், கார் பெறு - மேகமளாவிய, முப்புரிசை-மூன்றுமதில்களை, வலம் வந்த பின்னே-வலம்வந்த பிறகோ, மதராஜ பீடம் வாய்ப்பது - மன்மதராஜனது அரசிருக்கை கிடைப்பது, எ-று.

கலங்கொண்டியற்றிய செவ்வியும் - ஆபரணங்களைகொண்டு அலங்கரித்த அழகும், கார்பெறு - மேகத்தைப்போன்ற, முப்புரி - மூன்று பிரிவாக எடுத்துப் பின்னிய, சைவலம் - கொடிப்பாசிபோன்ற அளகம். மதராஜபீடம்-அல்குல். கூந்தலின் அழகைக் கண்டபிறகோ அல்குலின்பம் வாய்ப்பது என்பது பொருள். (கஉ)

தேனே யனைய மொழியான் க்ருபாகரன் செங்கதிரோன்
சூனு வெனுங்கொடை யையாத் துரையின் சுடர்கிரியில்
மானேய் மதியும் பொருப்பொடு நாக வடமுமின்றி
நானே யமுது கடைகுவ தெப்படி நன்னுதலே.

(இ-ள்.) தேனே அனைய மொழியான் - தேனைப்போல் ருசிக்கும்சொற்களையுடையவன், கிருபாகரன்-காருண்யமுடையோன், செங்கதிரோன் - சூரியனது, சூனு என்னும் கொடை - குமாரனாகிய கன்னன் என்று சொல்லும் ஈகைத்தனமுடைய, ஐயாத்துரையின் - ஐயாத்துரையென்னும் பிரபுவினது, சுடர் கிரியில் - ஒள்ளிய மலையின்கண், மானேய் மதியும் - முயற்கறையுடைய சந்திரனாகிய தம்பமும், பொருப்பொடு - மந்திரகிரியாகிய மத்துடன், நாக வடமும் இன்றி - வாசுகியாகிய வடக்கயிறுமில்லாமல், நானே அமுது - நான் மாத்திரம் தனியாக அமிர்தத்தை, கடைகுவது எப்படி-மதிப்பது எப்படி, நல் நுதலே - நல்லநெற்றியையுடையவளே, எ - று.

மானேய் மதி - முயற்களங்கமுள்ள சந்திரனையொத்த முகம், பொருப்பு - மலைபோன்ற ஸ்தனம், நாகம் - பாம்பின் படம்போன்ற அல்குல், வடம்-ஆலிலையொத்த வயிறு, இவ்வவயவங்கள் யாவும் இன்றி, நான் நேய முதுகு - நான் நேயமாகிய முதுகை, அடைகுவது எப்படி என்பது பொருள். அமுது கடைவது - அம்முதுகு அடைவது என்பது சொன்னயம். (கங)

கனம்படைத் தோன்றருங் கைப்படைத் தோனற் கருணையெனும்
மனம்படைத் தோன்றிரு வையாத் துரையின் வரையனையீர்
தனம்படைத் தோர்கட னேற்பவர்க் கீயுந் தகுதியுங்கள்
தனம்புதைத் தீர்பின்பி தென்னுங்கொல் பேதமைத் தன்மையதே.

(இ-ள்.) கனம் படைத்தோன் - மேன்மையைப் பெற்றவன், தரு கை படைத்தோன் - வித்வான்களுக்குக் கொடுக்குங் கையைப் பெற்றவன், நல் - மிகுதியாகிய, கருணை என்னும் மனம் படைத்தோன் - அருளாகிய மனதைப் பெற்றவன், திரு ஐயாத்துரையின் வரையனையீர் - அழகிய ஐயாத்துரையென்

னும் பிரபுவினது மலையை யொப்பவரே, தனம் படைத்தோர் கடன் - தனத்தைப்பெற்றவர்களது கடமையாவது, ஏற்பவர்க்கு-இரப்பவர்க்கு, ஈயும் தகுதி - கொடுக்குந்தகுதி, உங்கள் தனம் புதைத்தீர் - உங்களுடைய தனத்தைப் புதைத்துவைத்தீர், பின்பு இது என்னுங்கொல் - பிறகு இது என்னவாகுமோ, பேதமைத்தன்மை - அறிவிலாத குணம், எ - று.

தனம் - கொங்கை. பின்பு - முதுகு. கொங்கையின்பம் பெறவந்த எனக்கு அக்கொங்கைகளை மறைத்துப் புறங்காட்டல் நன்றன்றென்பது கருத்து.

வேணத்தைத் தந்து கவிஞர் கவிக்கொளும் விற்பனன்கல்
யாணத்தைக் கொண்டிடு மையாத் துரையி னிரும்பொறையீர்
மாணத்தைத் தேக்கும் புறம்பயங் காட்டினீர் மன்னுகும்ப
கோணத்தை யுங்காட்டி னாலோ பெரும்புண்யங் கூடிடுமே.

(இ-ள்.) கவிஞர் வேணத்தை தந்து கவி கொள்ளும் - அறிஞர்கள் வேண்டியதைக்கொடுத்துக் கவியைப் பெறுகின்ற, விற்பன்னன் - கல்வியிற் சிறந்தவன், கல்யாணத்தைக் கொண்டிடும்-மங்களகரத்தைக் கொள்ளாநின்ற, ஐயாத்துரையின் இரும்பொறையீர் - ஐயாத்துரையென்னும் பிரபுவினது மலையிலுள்ளவரே, மாணத்தை தேக்கும் - மாக்ஷிமை விளங்கும், புறம்பயங் காட்டினீர் - திருப்புறம்பயத்தைக் காட்டிவிட்டீர், மன்னு - நிலைபொருந்திய, கும்பகோணத்தையுங் காட்டினாலோ - கும்பகோணமென்னுந் தலத்தையுங் காட்டிவிட்டாலோ, பெரும் புண்யம் கூடிடும்-உங்களுக்குப் பெரிய புண்ணியம் சித்திக்கும், எ-று.

புறம் பயம் - முதுகினது பயன். கும்பகோணம் - கும்பத்தைப்போல் வட்டவடிவாகிய முலை. முதுகைக் காட்டியதுபோல முலைகளையுங் காட்டினால் நன்றென்பது கருத்து. (கரு)

வாளங் கயற்கண்ணி பாகன் பதமலர் வாழ்த்துகுண
வாளன் செழுந்தமி ழையாத் துரையின் வரையனையீர்
தாளந் தராது குழல்மாத் திரந்தந்த தாலினியான்
மேளங் கலக்க விசையோ துவதெங்ஙன் மெல்லியலே.

(இ-ள்.) வாள் அம் கயல் கண்ணி பாகன்-வாள்போன்ற அழகிய சேற்கண்டையையொத்த கண்களையுடைய பார்வதியை யிடதுபாகத்தில் வைத்தருளிய பரமசிவனது, பதமலர் - பாததாமரையை, வாழ்த்து - வாழ்த்தும்படியான, குணவாளன் - குணத்தைக்கொண்ட அடியவன், செழுந்தமிழ்-செழுமையாகிய தமிழாராய்ச்சியையுடைய, ஐயாத்துரையின் - ஐயாத்துரையினது, வரையனையீர் - மலையை யொப்பானவரே, தாளம் தராது - தாளத்தைக் கொடுக்காமல், குழல் மாத்திரம் தந்ததால் - குழலைமாத்திரங் கொடுத்ததால், யான் இனி—, மேளங்கலக்க - மேளங்கலக்கும்படி, இசையோதுவது-இராகத்தைப் பாடுவது, எங்ஙன் - எப்படி, மெல்லியலே - மெல்லிய இயலையுடையவளே, எ-று.

தாளம் - முலை. குழல்-கூந்தல். மேளம் - இடைசுருங்குபறை; உடுக்கை - இடை. மேளங்கலக்க - இடைபொருந்த. இசையோதுவது - சையோகிப்பது, எனவே மருங்கணைந்து கூடுதல் என்பது கருத்து. முலையைக் கொடுக்காமல் கூந்தலைக் காட்டியதால் மருங்கணைந்து கூடுவது எவ்வாறு என்பது பொருள். (கசு)

நீளத்தைக் கொண்ட கொடைக்காம தேனு நிகரெனுந்த
யாளத்தை யாத்துரை வெற்பனை யீர்தனி யாய்ப்புவியில்
தாளத்தை விட்டு குழலிசைக் காட்டி தகைகொள் துடி
மேளத்தைக் கொண்டிந்த தந்தனம் பாடல் விதியலவே.

(இ-ள்.) நீளத்தைக் கொண்ட - நீட்சிபொருந்திய, கொடை - ஈகையில், காமதேனு நிகர் என்னும்-காமதேனுவென்று சொல்லும், தயாளத்து-தயாளத்தையுடைய, ஐயாதுரை வெற்பனையீர் - ஐயாதுரைப் பிரபுவினது மலையையொப்பவரே, தனியாய் - தனிமையாக, புவியில் - பூமியின்கண், தாளத்தை விட்டு - தாளப்பிரமாணத்தைவிட்டு, குழல் இசை காட்டி - குழலினது இனிமையைக் காண்பித்து, தகை கொள் - அழகைக்கொண்ட, துடி மேளத்தை கொண்டு - உடுக்கையைக் கொண்டு, இந்த தந்தனம் பாடல் - இந்த தந்தனப் பாட்டைப்பாடுதல், விதி அல்ல - ஒழுங்கல்ல, எ-று.

தாளம் - முலை. குழல் - கூந்தல். துடி உடுக்கை - மருங்கு. தந்தனம்பாடல் - ஏமாற்றுதல். (கஎ)

அறவாழி யந்தணன் றாளின் புகழே யனுதினமும்
மறவாம லோதுநல் லையாத் துரையின் வரையனையீர்
புறவார் பனங்காட்டூர் கண்டனன் வாசப் புதுமலரின்
நறவா ரிலம்பையங் கோட்டூருங் காணி னலந்தருமே.

(இ-ள்.) அறவாழி அந்தணன் தாளின் புகழே - தருமக்கடலாகிய அழகியதன்மையையுடைய கடவுளினது திருவடியின் புகழையே, அனுதினமும் - பிரதிதினமும், மறவாமல் - மறக்காமல், ஓதும் - துதிக்கும், நல் - நற்குணம் வாய்ந்த, ஐயாத்துரையின் - ஐயாத்துரையென்னும் பிரபுவினது, வரையனையீர் - மலையை யொப்பவரே, புறவார் பனங்காட்டூர் கண்டனன்—, வாசப் புது மலரின் நறவு ஆர் - வாசனைபொருந்திய அன்றலர்ந்த மலரினது தேன்கள் பாயும், இலம்பையங்கோட்டூரும் காணில்—, நலம் தரும்—, எ-று.

புறம் வார் பனை காட்டு ஊர்-முதுகின் பக்கமாக நீண்ட கூந்தல்பனையைக் காட்டும் பிரதேசம், அதாவது கூந்தல். நறு அ வார் இல் அம்பு ஐயம் கோடு ஊர் - நன்மையாகிய அந்த கச்சுக்கு இருப்பிடமும் அம்பானது சந்தேகம் கொள்ளும் யானைக்கொம்புபோன்றுள்ள கொங்கைப்பிரதேசம். (கஅ)

கோதில வாயவின் சொற்கவி ஞர்க்கருங் குஞ்சரமற்
றோதிய வாறளித் தாளுமை யாத்துரை யோங்கலன்னீர்

ஏதிலர் தங்கட் கிருட்டரைக் காட்டு மியல்பதனால்
சூதிலை யோநுங்க ணெஞ்சினி லுண்மையைச் சொல்லுவிரே.

(இ-ள்.) கோது இல் ஆய-குற்றமில்லாததாகிய, இன் சொல் கவிஞர்க்கு-இனியசொற்களையுடைய வித்துவான்களுக்கு, அரும் குஞ்சரமும்-அரிய யானையும், மற்று ஓதியவாறு-மற்றும் சொல்லியபிரகாரம், அளித்து ஆளும் - கொடுத்துக்காப்பாற்றும், ஐயாத்துரை-ஐயாத்துரையென்னும் பிரபுவினது, ஓங்கலனீர்-மலையையொப்பவரே, ஏதிலர் தங்கட்கு - தரித்திரர்களுக்கு, இருட்டரை காட்டும்-இருள் சூழ்ந்த இடத்தைக் காண்பிக்கும், இயல்பு அதனால் - தன்மையினால், நுங்கள் நெஞ்சினில் சூது இல்லையோ - உங்களுடைய நெஞ்சில் சூது இல்லையோ, உண்மையைச் சொல்லுவீர் - மெய்ம்மையைச் சொல்லுவீர், எ-று.

இருட்டர் - இருள்போன்ற கூந்தல். சூது - சொக்கட்டான்காய், முலை. நெஞ்சு - மார்பு. (கக)

துவரிதழ்ச் செவ்வா யலர்மா திறைவன் சொலுமறங்கள்
நவமுறச் செய்திடு மையாத் துரையின் நகரனையீர்
கவரியைக் காட்டினீர் சிற்றால வட்டமுங் காட்டிவிட்டால்
உவரிப் பெருமுர சாளன் விழாவென்ப தொப்புவனே.

(இ-ள்.) துவர் இதழ் செவ்வாய் - பவளம்போன்ற இதழும் செவந்த வாயையுமுடைய, அலர் மாது இறைவன் - லக்ஷ்மிநாயகன், சொல்லும் அறங்கள் - நூலிற்கூறிய தருமங்கள், நவமுற - புதுமையாக, செய்திடும் - செய்யாநின்ற, ஐயாத்துரையின் - ஐயாத்துரையென்னும் பிரபுவினது, நகர் அனையீர்-நகரையொப்பானவரே, கவரியைக் காட்டினீர்—, சிற்றாலவட்டமும் காட்டிவிட்டால்—, உவரி - சமுத்திரமாகிய, பெரு - பெரிய, முரசாளன் - மன்மதனது, விழா என்பது ஒப்புவன் - திருவிழாவென்பதை ஒப்புவேன், எ-று.

கவரி - கூந்தல். சிற்றாலவட்டம் - அல்குல். காமன்விழா - கலவி. (உ௦)

சோலைச் செறிசெண்டை யையாத் துரையின் சுடர்கிரியீர்
மேல மருந்திணை சொல்லிடங் காலமும் விட்டொருவைம்
பாலின் வகைதெரி வித்தீ ரதனாற் பகர்ந்திடுநன்
னூலை யுணர்வ தெளிதோ வுளதை நுவன்மின்களே.

(இ-ள்.) சோலை செறி - பற்பலசோலைகள் நெருங்கிய, செண்டை ஐயாத்துரை மன்னன்-செண்டத்தூர் ஐயாத்துரையென்னும் பிரபுவினது, சுடர் கிரியீர் - விளங்காநின்ற மலையையுடையவரே, மேல் அமரும் திணை சொல் இடம் காலமும் விட்டு-மேலேபொருந்திய திணை சொல் இடம் காலம் இவையினிலக்கணங்களைவிட்டு, ஒரு ஐம்பாலின்வகை தெரிவித்தீர் - ஐம்பால்வகையைத் தெரிவித்தீர், அதனால்—, பகர்ந்திடும் நன்னூலை உணர்வது - சொல்லும்படியாகிய நன்னூலை யுணர்வது, எளிதோ - எளியதோ, உளதை - உள்ளதை, நுவன்மின்கள் - சொல்லுங்கள், எ-று.

திணை - அஃறிணை, உயர்திணை. சொல் - இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல். இடம் - தன்மை, முன்னிலை, படர்க்கை. காலம் - இறந்தகாலம், எதிர்காலம், நிகழ்காலம். பால் - ஆண்பால், பெண்பால், பலர் பால், ஒன்றன்பால், பலவின்பால். திணை, சொல், இடம், காலம் இவைகளின் வகையைத் தெரிவிக்காமல் பால்வகையைத் தெரிவித்தீர், அதனால் நன்னூலை யுணர்வது எளியதோ என்பது பொருள்.

மேல் அம் மருந்து இணை - தேவலோகத்தினது அழகிய அமிர்தத்தை யொப்பாகிய, சொல் - சொல்லும், இடம்-அல்குலும்,காலமும் விட்டு - நினது பருவமும்விட்டு. ஐம்பால்வகை - ஐந்துபகுப்பாகிய கூந்தலின்வகை; அவையாவன:—முடி, குழல், தொங்கல், பனிச்சை, சுருள்; இவற்றுள், உச்சியின் முடித்தல் முடி, சுருட்டி முடித்தல் குழல், மயிரை முடிந்துவிடல் தொங்கல், பின்னிவிடுதல் பனிச்சை, பின்னே செருகிடல் சுருள். நூலை யென்றது இடையை. இவ்வவயவங்களைக் காணாது கூந்தலைக் கண்டு நமது மருங்குலை யறிவது அறிது என்றபடி. (உக)

காருறு சோலைத் திருச்செண்டை வாசன் கடிமலரின்
றார்புனை யையாத் துரைராஜ பூபன் றடங்கிரியீர்
நேர்நிரை நேரெனுஞ் சீர்வேண்டு வேற்கு நிரையெனைச்
சீர்வகை வெங்குர லாலே தெரித்ததென் சிந்தைகொடே.

(இ-ள்.) காருறு - மேகங்கள் தவழாநின்ற, சோலை - சோலைகள் சூழ்ந்த, திருச்செண்டைவாசன்—, கடிமலரின் தார் புனை ஐயாத்துரை ராஜபூபன் தடம் கிரியீர்-வாசனை பொருந்திய மலர்மாலையணிந்த ஐயாத்துரையென்னும் சீமானது விசாலமாகிய மலையையுடையவரே, நேர்நிரைநேர் என்னும் சீர் வேண்டுவேற்கு-நேர்நிரைநேர் என்னும் சீரை வேண்டும் எனக்கு, நிரையென் அசைச்சீர் - நிரையென்னும்படியாகிய அசைச்சீர், வகை - வகையை, வெங்குரலாலே - வெவ்விய குரலாலே, தெரித்தது - தெரிவித்தது, என் சிந்தைகொடே - என்ன சிந்தைகொண்டு, எ-று.

நேர் நிரை நேர்-கூவிளங்காய் (முலை). நிரையென்னும் அசைச்சீர்-மலர். வெங்குரல் - கரியகூந்தல். வில்வக்காய்போன்ற முலையினது இன்பத்தைப் பெறவிரும்பு மெனக்கு மலரோடுங் கூடிய கூந்தலைத் தெரிவித்தது நன்றன் றென்பது கருத்து. (உஉ)

தெருள்காட்டுநெஞ்சத்திடமுடையோன்செண்டைவாணன்கொடை
அருள்காட்டுங் கண்ணின னையாத் துரையின் அணிவரையில்
மருள்காட்டி யெந்தன் கருத்தறை போக்கிநும் வஞ்சமிகும்
சுருள்காட்டி யாயிரம் பாக்கை மறைத்ததென் சுந்தரமே.

(இ - ள்.) தெருள் காட்டு நெஞ்சத்திடமுடையோன் - தெளிவைக்காட்டும் மனதின் திடத்தையுடையவன், செண்டைவாணன் - செண்டையில் வாழ்வுடையோன், கொடை அருள் காட்டும் கண்ணினன் - ஈகையாகிய அருளைக்

காட்டுங் கண்களையுடையவன், ஐயாத்துரையின் அணிவரையில் - ஐயாத்துரை யென்னும் பிரபுவினது மலையில், மருள் காட்டி-மருளைக்காட்டி, எந்தன் கருத்தறை போக்கி - எனதுமனதை போல்படுத்தி, நும் - நுமது, வஞ்சம் - வஞ்சனை, மிகும் - மிகுந்த, சுருள் காட்டி - வெற்றிலைச்சுருளைக்காட்டி, ஆயிரம் பாக்கை —, மறைத்தது என் - மறைத்தது என்ன, சுந்தரம் - சுந்தரமுடையவளே, எ-று.

சுருள் - கூந்தல். ஆயிரம்பாக்கு - கலசம் என்னும் பெயராதலால் தனத்துக்குவமையாயிற்று. (உ௩)

சாரிகைக் கொண்ட கடும்பரித் தேரினன் தண்டமிழில்
வாரிகைக் கொண்டோ னிணைசொலு மையாத் துரைவரையீர
பூரிகைக் கொண்ட எழுத்தொடு சொல்லும் பொருளுமின்றி
காரிகை யோதிவிட் டேன்வா ரணிநலங் காட்டுவையே.

(இ-ள்.) சாரிகைக்கொண்ட கடும்பரித்தேரினன் - வட்டமாயோடுகின்ற வேகம்பொருந்திய நடையையுடைய குதிரைகள் பூண்ட தேரையுடையவன், தண் தமிழில் - குளிர்ந்த தமிழில், வாரிகை கொண்டோன் இணை சொலும் ஐயாத்துரை வரையீர் - சமுத்திரத்தை ஆசமனஞ் செய்யும்பொருட்டுக் கையில் கொண்டருளிய அகத்தியனுக்கு ஒப்பாகச்சொல்லும் ஐயாத்துரையென்னும் பிரபுவினது மலையிலுள்ளவரே, பூரிகை கொண்ட - மிகுதியும் ஒழுங்குமமைந்த, எழுத்தொடு சொல்லும் பொருளும் இன்றி-எழுத்துஞ் சொல்லும் பொருளினது இலக்கணமில்லாமல், காரிகை ஓதிவிட்டேன் - காரிகை என்னும் நூலைப் படித்துவிட்டேன், வார் அணி நலம் காட்டுவையே - நுண்மையாகிய அணி இலக்கணங்களது பயனைக்காட்டுவை, எ-று.

எழுத்து - சித்திரம்; அழகு சொல் - வார்த்தையாடல். பொருள்-அதரம், நகை, முகம் முதலியபொருள்கள்; இவைகளில்லாமல், காரி - கருமையமைந்த, கை - ஒப்பனையமைந்த, ஓதி - கூந்தலை, விட்டேன் - பார்த்துவிட்டேன். வார் - கச்சு, அணி - அணியப்பட்ட, நலம் - பயனை, கொங்கையையென்றபடி, காட்டுவை - காட்டுவாய். (உ௪)

சுதியொன் றுவண்டிமிர் சோலைகள் சூழ்ந்திடுஞ் செண்டநகர்ப்
பதியென்று பேர்கொண்ட சீர்முரு கப்பன் பரிந்தநவ
நிதியென் றுரைக்குமை யாத்துரை வெற்புளீர் நேர்மையதாய்
மதியின்றி கற்றறையைக் காட்டலு முண்டுகொல் மாநிலத்தே.

(இ-ள்.) சுதியொன்று வண்டிமிர் சோலைகள் சூழ்ந்திடும் செண்டநகர் - இராகத்தைப்பாடாநின்ற வண்டுகள் மொய்க்கும் சோலைகள்சூழ்ந்த செண்ட நகர்க்கு, பதி என்று பேர் கொண்ட - அரசனென்னும் பெயரைவகித்த, சீர் முருகப்பன் - சிறந்த முருகப்பன், பரிந்த - அன்புபொருந்திய, நவநிதி என்று உரைக்கும் - நவநிதியென்று சொல்லும், ஐயாத்துரை வெற்புளீர்-ஐயாத்துரை யென்னுஞ் சீமானது மலையிலுள்ளவரே, நேர்மையதாய்-செம்மையாக, மதிர்

இன்றி - சந்திரனில்லாமல், கற்றையை - கிரணங்களை, மா நிலத்து - பெரிய வுலகில், காட்டலும் உண்டுகொல் - காட்டுதலும் உண்டோ, எ-று.

மதி - முகம். கற்றை - மயிர்த்தொகுதி. நவநிதி: கச்சபநிதி, கற்பநிதி, சங்கநிதி, நந்தநிதி, நீலநிதி, பதுமநிதி, மகாநிதி, மகாபதுமநிதி, முகுந்தநிதி; இவையே குபேரனவநிதி. (உகு)

தயாதரங் காட்டுஞ் செண்டைப் பதியினன் தார்மலிந்த
புயாதரங் கொண்டிடு மையாத் துரையின் பொருப்பதனில்
நயாதரங் காட்டுங் கிளிமொழி யீரின்று நன்மையோடு
பயோதரங் காட்டிப் பயோதரம் பற்றலும் பான்மையதே.

(இ-ள்.) தயாதரம் காட்டும்-கருணையினது தன்மையைக்காட்டாநின்ற, செண்டைப்பதியினன்—, தார் மலிந்த-மாலைமலிந்த, புயாதரம் கொண்டிடும் - புயமாகிய மலையைக்கொண்டிடும், ஐயாத்துரையின் - ஐயாத்துரையென்னுஞ் சீமானது, பொருப்பதனில் - மலையின்கண்ணே, நயாதரங்காட்டும் கிளிமொழியீர் - நயமாகிய தன்மையைக்கொண்ட கிளிபோன்ற சொற்களையுடையவரே, இன்று—, நன்மையொடு - நன்மையாக, பயோதரம் காட்டி பயோதரம் பற்றலும் - மேகத்தைக்காட்டி மேகத்தைப்பிடித்தலும், பான்மையதே - தகுதியானதே, எ-று.

பயோதரம் - மேகம் (கூந்தல்) முலை. பயம் - நீர், பால்; உதரம் - வயிறு.

ஆலையின் றீம்புன லட்டிடு தூம மெழிலியெனுஞ்
சாலையைக் கொண்ட செண்டைப் பதியையாத் துரைத்தடத்தீர்
சேலையும் வேலையுங் காணவந் தேனுக்குச் சீர்மையொடு
மாலையுஞ் சோலையுங் காட்டிவிட் டீருங்கள் மாயநன்றே.

(இ-ள்.) ஆலையின் தீம் புனல் அட்டிடும் தூமம் - கரும்பாலையினது தித்திப்பாகிய நீரைக்காய்ச்சும் அடுப்பினின்றும் எழாநின்ற புகையை, எழிலி என்னும் - மேகமென்று சொல்லும், சாலையைக்கொண்ட செண்டைப்பதி - சாலைகளைக்கொண்டிராநின்ற செண்டைக்கதிபதியாகிய, ஐயாத்துரை தடத்தீர் - ஐயாத்துரையென்னுஞ் சீமானது தடத்தையுடையவரே, சேலையும் வேலையும் - சேலையையும் அதனது வேலைப்பாட்டையும், காணவந்தேனுக்கு - பார்க்கவந்த எனக்கு, மாலையுஞ் சோலையும் காட்டிவிட்டீர் - பூமாலையையும் பூந்தோட்டத்தையுங் காட்டினீர், உங்கள் மாயம் நன்று-உமதுமாயம் நன்றாயிருந்தது, எ-று.

மாலை - பூமாலை, மயக்கம். சோலை - பூந்தோட்டம், கூந்தல். சேலையும் வேலையும்-சேற்கண்டையையும் வேலாயுதத்தையும்போன்ற கண்களை. வேலை - சமுத்திரம் (கண்). (உஎ)

கரும்பல தில்லா மதுரத் தமிழின் கலைபயின்றப்
பெரும்பயன் கண்டமன் னையாத் துரையின் பிறங்கலன்னீர்
சுரும்பின் றொகுதிகண் டேனது போனும தோடகத்தின்
அரும்பினை யுங்கண்டா லுத்தம மாமிக்க வன்புகொண்டே.

(இ - ள்.) கரும்பு அல்து இல்லா மதுரத்தமிழின் - கரும்பையன்றி வேறொன்றை இணைசொல்லாத இனிமைபொருந்திய தமிழினது, கலை பயின்று - சாத்திரங்களை உணர்ந்து, அ பெரும் பயன் கண்ட - அதனது பெரிய பலனைக்கண்ட, ஐயாத்துரையின் - ஐயாத்துரையென்னுஞ் சீமானது, பிறங்கலன்னீர்-மலையையொப்பவரே, சுரும்பின் தொகுதியைக் கண்டேன் - வண்டுகளது தொடர்ச்சியைக் கண்டேன், அதுபோனுமதோடகத்தின் - அதைப்போல் உங்களுடைய தாமரையினது, அரும்பினையும் கண்டால் - அரும்புகளையுங் கண்டால், உத்தமமாம் - நன்மையாகும், மிக்க அன்பு கொண்டு—, எ-று.

சுரும்பு - வண்டு, கூந்தல். தோடகம் - தாமரை. அரும்பு - மொக்கு, முலை. (உஅ)

பத்தரை மாற்றுப் பசும்பொன்னின் மிக்கநற் பான்மைமிகும்
வித்தரைப் போற்றிடு மையாத் துரையின் விலங்கலன்னீர்
தொத்தரை யப்பரைக் கண்டேன்சம் பந்தரை சுந்தரமா
முத்தரை மாணிக்க வாசகரைக் காண முன்னினனே.

(இ - ள்.) பத்தரை மாற்று பசும்பொன்னின் மிக்க நற்பான்மை மிகும் வித்தரை - பத்தரைமாற்றுடைய பைம்பொன்னினும் அதிகரித்த குணம்பொருந்திய திருமேனியையுடைய சிவபெருமானை, போற்றிடும் - தொழுதிடும், ஐயாத்துரையின் - ஐயாத்துரையென்னுஞ்சீமானது, விலங்கலன்னீர்-மலையையொப்பவரே, தொத்தரை - திருத்தொண்டர்களை, அப்பரை - திருநாவுக்கரசு சுவாமிகளை, கண்டேன் - தரிசித்தேன், சம்பந்தரை - ஞானசம்பந்தசுவாமிகளை, சுந்தரமாமுத்தரை-சுந்தரமூர்த்திசுவாமிகளாகிய பெரியவரை, மாணிக்க வாசகரை-மாணிக்கவாசகசுவாமிகளை, காண முன்னினன் - பார்க்க எண்ணங் கொண்டேன், எ-று.

தொத்தர் - பூங்கொத்துகளையுடைய, அப்பர் - நீரையுடைய மேகம் (கூந்தல்). சம்பந்தர் - அழகிய பந்துபோன்ற முலைகளை. சுந்தரமாம் முத்து அர் - அழகாகிய முத்துபோன்ற பற்களை. மாணிக்கவாசகரை - மாணிக்கத்தைப் போன்ற சொற்களை. (உக)

ஒருவாப் பெரும்புகழ் மூவெழு வள்ளலை யொக்கவந்த
தருவார் பெருங்கொடை யையாத் துரையின் றடங்கிரியீர்
திருவாச கங்கோவை யாரிசைப்பா மந்த்ரம் தேர்தலின்றி
உருவார்கொங் கென்னுநற் பாப்பொரு ளின்றே னுணர்த்தியதே.

(இ-ள்.) ஒருவா பெரும் புகழ்-கெடாத பெரியபுகழையுடைய, மூவெழு வள்ளலையொக்க - இருபத்தொருவள்ளலை யொக்கவும், அந்த தருவு ஆர்-அந்த தேவதருக்களை ஒப்பாகவும், பெருங்கொடை - பெரிய கொடுக்குந்தன்மையையுடைய, ஐயாத்துரையின் - ஐயாத்துரையென்னுஞ் சீமானது, தடங்கிரியீர் - விசாலமாகிய மலையிலுள்ளவரே, திருவாசகம்—, கோவையார்-திருக்கோவையார், இசைப்பா - திருவிசைப்பா, மந்திரம்-திருமந்திரம், தேர்தலின்றி-அறி

வது அல்லாமல், உருவார் - புதுமையாகிய, கொங்கென்னும்-கொங்கென்னு முதலையுடைய, நல் பா பொருள்-நல்லகவியினது பொருளை, இன்றேன் உணர்த்தியது - இன்றேன் தெரிவித்தது, எ-று.

திருவாசகம் - அழகியசொல். கோவை - முத்துமாலை, ஆர் - பொருந்திய. இசைப்பு - நெருங்கிய. மந்திரம் - மலை (முலை). கொங்குதேர் வாழ்க்கையென்னும் கவியினது உள்ளுறைப்பொருள் - இயற்கைமணமுள்ள கூந்தல். (௩௦)

கெட்டாரைத் தாங்குங் கேண்மைய னீகைக் கொடியதனை
நட்டாரை யாத்துரைப் பூப நரேந்திர னாகமன்னீர்
கட்டாரை வண்புய வுக்கிர பாண்டியன் கையிலகப்
பட்டாரை விட்டுபொன் றட்டானைச் சேரினம் பாக்கியமே.

(இ-ள்.) கெட்டாரை - வாடினவர்களை, தாங்கும்-ஆதரிக்கின்ற, கேண்மையன்-கண்ணோட்டமுடையவன், ஈகை கொடியதனை - தருமக்கொடியை, நட்டு ஆர் ஐயாத்துரைப்பூப நரேந்திரன் - நட்டு அதன்பயனை யனுபவிக்கும் ஐயாத்துரையென்னு அரசசிகாமணியினது, நாகமன்னீர் - மலையையொப்பவரே, கள் தார் ஐ வள் புய உக்கிரபாண்டியன் கையில்-தேன்பொருந்திய மாலையையுடைய அழகியவளம்பொருந்திய தோள்களையுடைய உக்கிரபாண்டியனது கையில், அகப்பட்டாரை - அகப்பட்டவர்களை, விட்டு - விட்டு, பொன் தட்டானை - பொன்வேலைசெய்யுந் தட்டானை, சேரில் - சேர்ந்தால், நம் பாக்கியம்-நமது பாக்கியம், எ-று.

உக்கிரபாண்டியன்கையில் அகப்பட்டார் - மேகம் (கூந்தல்). பொன் தட்டு - பொன்னாலாகிய தேர்தட்டு (அல்குல்). ஆனை - ஆனைக்கொம்புபோன்ற முலை. (௩௧)

மடல்விரி தெங்கடர் செண்டையில் வாசன் மருவலரை
யடவல வையாத் துரைராஜ பூப னணிவரையில்
கடலையும் வெல்ல மவலையுங் கொண்டிரு காற்பணத்தைத்
தடையின்றி தாரா தலைகாட்டி னையடித் தாரணங்கே.

(இ-ள்.) மடல் விரி - மடல்கள் விரிந்த, தெங்கு அடர் - தென்னமரங்கள் நெருங்கிய, செண்டையில் வாசன்-செண்டத்தூரில் வசிப்பவன், மருவலரை - பகைவரை, அடவல்ல - அடக்கவல்ல, ஐயாத்துரை ராஜபூபன்-ஐயாத்துரையென்னுஞ் சீமானது, அணிவரையில் - அழகியமலையில், கடலையும் வெல்லம் அவலையும்கொண்டு—, இருகால் பணத்தை - அரைபணத்தை, தடையின்றி - தடையில்லாமல், தாராது - கொடுக்காமல், அலைகாட்டினையடி - அலையச்செய்தாயடி, தார் அணங்கே - மாலையையணிந்தவளே, எ-று.

கடு - விஷத்தையும், அலை - சமுத்திரத்தையும், வெல் - வெல்லப்பட்ட, அம் - அழகு (கண்கள்), அ - அந்த, வல்லையும் - சூதுக்காயையும் (முலை).

இரு கால் பணம் - இரண்டுகாலுக்கும் நடுவிலுள்ள படம் (அல்குல்). அல்லைக் காட்டினாய் - இருட்டைக்காட்டினாய் (கூந்தல்). அல்லையெனற்பாலது அலை என்றாயது. (ருஉ)

சொற்கடங் காவின் சுவைப்பாக்கு மைந்தனைப் போலளிக்கு
நற்கொடை யையாத் துரைராஜ பூப னகமதனில்
பொற்குடங் கொண்டு பணத்தைத் தராதுபின் போதியென்றால்
மற்கட மான விவகார மாமடி மாங்குயிலே.

(இ-ள்.) சொற்கு அடங்கா-சொல்லுதற்கு அடங்காத, இன் சுவை பாக்கு-இனிப்பாகிய சொற்சுவை பொருட்சுவைகளோடுகூடிய கவிதைக்கு, மைந்தனைப்போல் நற்கொடைஅளிக்கும்-பைத்தியனைப்போல் கேட்டதைக்கொடுக்கா நின்ற, ஐயாத்துரை ராஜபூபன்—, நகமதனில்-மலையின்கண்ணே, பொற்குடங் கொண்டு - பொன்னின் குடத்தைக்கொண்டு, பணத்தைத்தராது - பணத்தைக் கொடுக்காமல், பின்போதியென்றால் - பின்னேவாருமென்றால், மற்கடமான விவகாரம் ஆம் - குரங்குத்தனமாகும், அடி மாங்குயிலே - அடி மாமரத்திலிருக் கப்பட்ட குயிலுக்கொப்பானவளே, எ-று.

பொற்குடம் - தனம், பணம் - அல்குல், பின்பு - முதுகு, ஓதி - கூந்தல். தனத்தைக்கொண்டு அல்குலைக்காட்டாமல் முதுகையும் கூந்தலையுங் காட்டினதால் மற்கடமென்னுங் காணத்திற்கு ஏதுவாகும் என்பது கருத்து. மற்கடத்தின் குணம் - கொடுத்ததைவிடாது பற்றல். (ருங)

சோலையின் மந்திப் பிணாவொடு துஞ்சிடுஞ் செண்டையிலம்
மாலை யிணைசொலு மையாத் துரையின் வரைதனின்மன்
பாலையைக் காட்டினீர் முல்லைக் குறிஞ்சிப் பணைமருத
மூலையுங் காட்டிநன் னெய்தலுங் காட்டிடின் முக்கியமே.

(இ-ள்.) சோலையில் - சோலைகளிலே, மந்தி - ஆண்குரங்கானது, பிணாவொடு - பெட்டைக்குரங்குடனே, துஞ்சும் - தூங்குகிற, செண்டையில் - செண்டத்தூரில், அம் மாலை - அந்த விஷ்ணுவை, இணை சொலும் - ஒப்பிடுகின்ற, ஐயாதுரையின் - ஐயாதுரையென்னுஞ் சீமானது, வரைதனில் - மலையின்கண்ணே, மன்-நிலைபொருந்திய, பாலையைக்காட்டினீர்—, முல்லை—, குறிஞ்சி—, பணை - கழனியாகிய, மருதமூலையுங் காட்டி - மருதநிலத்தினது மூலையையுங்காட்டி, நல் நெய்தலும் காட்டிடில் - நல்ல நெய்தல்நிலத்தையுங் காட்டினால், முக்கியம் - முக்கியந்தான். எ-று.

பால், ஐ, ஐ - ஐந்து பகுப்பாகிய அழகு (கூந்தல்). முல்லை-முல்லையரும்பு (பல்). குறிஞ்சி - மலை (தனம்). மருதம் மூலை - வாசனைபொருந்திய தம்து கோணம் (நிதம்பம்). நெய்தல் - நீலோற்பலம் (கண்). ஐந்துபகுப்பாகிய கூந்தலைக்காட்டிவிட்டாய், மூரலையும் தனங்களையும் அல்குலையும் கண்களையும் காட்டினால் அவசியம் என்பது கருத்து. (ருச)

மெச்சும் புலவர் கவிக்கொரு பொன்றரு வேந்தன்புவி
நச்சுந் தயாள வரகுண ஸையாத் துரைநகத்தீர்
கச்சிப் பதிக்குசென் றன்னது காணாது காமரஞ்சேர்
செச்சைப் புனையேல வார்குழலைக்கண்டு சேவித்தனே.

(இ-ள்.) மெச்சும் - ஆன்றோர்களால் மெச்சப்படாநின்ற, புலவர் - வித்துவான்களது, கவிக்கு - பாட்டுக்கு, ஒருபொன் - ஒவ்வொருபொன், தரும் - கொடுக்காநின்ற, வேந்தன்-அரசன், புவி நச்சும் - உலகத்தவரால் ஆசைகொள்ளும், தயாள - தயாளத்தைக்கொண்ட, வரகுணன் - மேன்மையாகிய குணத்தையுடையவன், ஐயாத்துரை நகத்தீர் - ஐயாத்துரையென்னும் வள்ளலினது மலையிலுள்ளவரே, கச்சிப்பதிக்கு சென்று - காஞ்சிபுரத்திற்குப்போய், அன்னது காணாது - அந்நகரத்தினைக் காணாமல், காமரம் சேர் - வண்டுகள் மொய்க்கும், செச்சை புனை வெட்சிமலரணிந்த, ஏலவார் குழலை - ஏலவார்குழலியை, கண்டு சேவித்தன் - கண்டு தரிசித்தேன், எ-று.

கச்சிப்பதி-இரவிக்கையணிந்த முலை. ஏலம் வார் குழல்-மயிர்ச்சாந்தணிந்த நீண்ட கூந்தல். தனத்தைக் காணாமல் பின்புறமாகிய கூந்தலைக் கண்டேன் என்பது கருத்து. (நடு)

சென்றிரந் தோரைத் தமராய் நினைக்குந் திறத்துநளன்
மன்றலந் தார்த்திரு வையாத் துரையின் வரையதனில்
குன்றினைத் தூக்கிக் குடைபிடித் தோன்செயுங் கூத்திரண்டில்
ஒன்றினைக் காட்டிமற் றொன்றை மறைத்ததெ னொண்டொடியே.

(இ-ள்.) சென்று இரந்தோரை - போய் யாசித்தவர்களை, தமராய் நினைக்கும் திறத்து நளன் - உறவினராகநினைக்கும் குணத்தில் நளமகாராஜன், மன்றல் - வாசனைபொருந்திய, அம்-அழகிய, தார்-மாலையுடைய, திரு - அழகிய, ஐயாத்துரையின் - ஐயாத்துரையென்னும் வள்ளலினது, வரையதனில் - மலையின்கண்ணே, குன்றினை தூக்கி-கோவர்த்தனகிரியைத்தூக்கி, குடை பிடித்தோன் - குடையாகத்தாங்கிய கடவுள், செயும்-செய்யாநின்ற, கூத்து இரண்டில் - கூத்து இரண்டில், ஒன்றினைக்காட்டி—, மற்றொன்றை—, மறைத்தது என் - மறைத்த காரணம் என்ன, ஒள் தொடியே - ஒளிபொருந்திய வளையலையணிந்தவளே, எ-று.

விஷ்ணுவினது கூத்திரண்டாவது அல்லியம், குடம். முதலாவது: அல்லி, அம் - இருட்டினது அழகு (கூந்தல்). இரண்டாவது: குடம் (முலை). யாசித்தவரைத் தமராய் நினைக்குந் திறத்து நளன் என்றது "இரப்பவர் தமரினு மினியராவரே" என்பதனு லறிக. (நகூ)

பாலத் திருநய னத்தோன் கமலப் பதமலரின்
சீலத்தைச் சொல்லு மையாத் துரைப்பூபன் சிலம்பனையீர்
நீலக்கே சித்திரட் டோர்ந்தே னிலக்கண சந்திரிகை
மூலத்தைத் தந்திடி னுட்பொருள் கண்டு முயங்குவனே.

(இ-ள்) பாலத் திருநயனத்தோன்-அழகிய நெற்றிக்கண்ணையுடைய சிவபிரானது, கமலம் பத மலரின் - தாமரைக்கொப்பாகிய பாதமலரினது, சீலத்தை - குணத்தை, சொல்லும் - புகழ்கின்ற, ஐயாத்துரைப்பூபன் - ஐயாத்துரையென்னுஞ் சீமானது, சிலம்பனையீர் - மலையையொப்பவரே, நீலக்கேசித்திரட்டு ஓர்ந்தேன் - நீலகேசித்திரட்டென்னுநூலை யுணர்ந்தேன், இலக்கண சந்திரிகை மூலத்தை - இலக்கணசந்திரிகையென்னும் மூலத்தை, தந்திடில் - கொடுத்தால், உள் பொருள் கண்டு-அதின் நுட்பமாகிய அருத்தத்தையறிந்து, முயங்குவன் - அனுபவிப்பேன், எ-று.

நீலம் கேச இ திரட்டு ஓர்ந்தேன் - நீலநிறத்தோடுங்கூடிய கூந்தலாலாகிய இந்தச் சுருளை யறிந்தேன், இலக்கண சம் திரி-சிறந்து அழகுவாய்ந்த, கைமூலத்தை - கொங்கைகளை, தந்திடில் - கொடுத்தால், உட்பொருள் கண்டு - நிதம்பத்தைக் கண்டு, முயங்குவன் - கலவிசெய்வேன் என்பது கருத்து. (௩எ)

தெருளும் பொருளு மருமா மலரின் றிருமகளின்
அருளும் பெருகிய வையாத் துரையி னணிவரையீர்
மருளும் பொருளொடு கள்ளருங் கொத்தொடு மன்னியபின்
இருள ரிருக்க மறவர்க ளெங்கொளித் திட்டனரே.

(இ-ள்.) தெருளும் - தெளிவும், பொருளும் - அருத்தாபத்தியும், மருமா மலரின் திருமகளின் - வாசனைபொருந்திய அழகிய தாமரைமலரில் வீற்றிருக்கும் இலக்குமியினது, அருளும்-கிருபையும் (சம்பத்துகளும் என்றபடி), பெருகிய - பெருக்கமுற்ற, ஐயாத்துரையின் - ஐயாத்துரையென்னும் பிரபுவினது, அணிவரையீர் - அழகிய மலையிலுள்ளவரே, மருளும் பொருளொடு - மருளச்செய்யும் பொருள்களுடனே, கள்ளரும்—, கொத்தொடு - கூட்டமாக, மன்னியபின் - சேர்ந்தபின், இருளர் இருக்க - வேடர்கள் இருக்க, மறவர்கள் எங்கொளித்திட்டனர்—, எ-று.

மருளும் பொருள் - ஆடவரை மயக்கும் மயிர்ச்சாந்தாகிய வாசனைப் பொருள். கள் அரும் கொத்து - தேன்பொருந்திய அரிதாகிய பூங்கொத்து. மன்னிய பின் இருளர் - நிலைபொருந்திய முதுகின்பக்கமாகிய இருட்டன்மை வாய்ந்த கூந்தல். மறவர்கள் - மறத்தன்மை (முறட்டுத்தன்மை) வாய்ந்த தனங்கள். (௩அ)

பாட லருமறை யோர்கள்வந் தாசிப் பகரவாழ்நாள்
நீட லுறுதிற வையாத் துரையி னெடுங்கிரியீர்
கூடலுக் காயபொற் றமரை வாவி குளித்ததற்பின்
ஆட லறுபத நாலையுங் காண்ப தவசியமே.

(இ-ள்.) பாடல் அருமறையோர்கள் வந்து-சுரங்களோடுங்கூடிய வேதத்துக்குரியவர்கள் வந்து, ஆசி பகர - ஆசீர்வாதஞ்செய்ய, வாழ் நாள் - ஜீவியகாலம், நீடலுறு திறம்-நீடிக்கும்படியான பாக்கியத்தைப்பெற்ற, ஐயாத்துரையின் நெடுங்கிரியீர்-ஐயாத்துரையென்னும் சீமானது நெடியமலையிலுள்ளவரே,

கூடலுக்காய - மதுரைக்குப்பொருந்திய, பொன் தாமரை வாவி - பொற்றுமரைத் தீர்த்தத்தில், குளித்து-முழுகி, அதன்பின் - அதன்பிறகு, ஆடல் - திருவிளையாடல், அறுபது அ நாலையும் - அந்த அறுபத்துநாலையும், காண்பது அவசியம் - காண்பது அவசியமேயாம், எ - று.

கூடல் - கலவிசெய்தல். பொற்றுமரை - அழகிய தாமரைக் கயம் (அல்குல்). பின் - முதுகு. அறுபதம் - வண்டுகள். நாலல் - தொங்குதல். (௩௯)

கதுவாப் பெரும்புக ழையாத் துரையின் கனச்சிலம்பில்
விதுவார் திருமுக வல்லிநல் லீர்நலம் வேட்டிடுவான்
மதுவார் பொழிலிளங் கால்வேட்க நுங்கள்வாய் மன்சுருளை
முதுகால் கொடுத்தது நன்று மெமக்குநன் முக்கியமே.

(இ-ள்.) கதுவா பெரும் புகழ்-குறைவுபடாத பெரிய புகழையுடைய, ஐயாத்துரையின் - ஐயாத்துரையென்னுஞ் சீமானது, கன சிலம்பில் - பெரியமலையில், விதுவார் திருமுக வல்லி நல்லீர் - சந்திரனைப்போன்ற அழகிய முகத்தையுடைய கொடிபோன்றவரே, நலம் வேட்டிடுவான் - விவாகஞ்செய்யும் பொருட்டு, மது ஆர் பொழில்-தேனொழுகும் சோலையில், இளங்கால் வேட்க- இளங்கால் வெற்றிலையை அபேட்சிக்க, நுங்கள் வாய்மன் - உமது வாயிற் பொருந்திய, முதுகால் சுருளை கொடுத்ததும் நன்றும் - முதுகாலாகிய வெற்றிலைச்சுருளைக் கொடுத்ததும் நல்லதே, எமக்கும் நல் முக்கியம்-எங்களுக்கும் நல்ல முக்கியந்தான், எ-று.

இளங்கால் - தென்றல், வேட்க - ஆசை அதிகரிக்க, நும் - நுமது, கள் வாய் - தேன்பொருந்திய, மன் - பெருமைவாய்ந்த, சுருளை - கூந்தலை, முது கால் - முதுகின்பக்கமாக, கொடுத்தது - தந்தது என்பது கருத்து. (௪௦)

வளங்கா மருவிய சென்னையில் வாசன் வனிதையர்கள்
உளங்காதல் கொள்தகை யையாத் துரையின் உயர்கிரியீர்
இளங்காலி லுங்கள் முதுகாலைக் காட்டி இருந்தனத்தை
விளங்காம லாக்கிவிட் டீரிது வும்நல்ல வேடிக்கையே.

(இ-ள்.) வளம் கா மருவிய - வளப்பமாகிய தருக்கள் சூழ்ந்த, சென்னையில் வாசன்—, வனிதையர்கள் உளம் காதல் கொள் தகை - பெண்டுகளது மனதில் ஆசைகொள்ளும் அழகுவாய்ந்த, ஐயாத்துரையின் - ஐயாத்துரையென்னுஞ் சீமானது, உயர் கிரியீர் - உயர்ந்த மலையிலுள்ளவரே, இளங்காலில் - இளங்கால் வெற்றிலையில், உங்கள் - உங்களுடைய, முதுகாலை காட்டி - முதுகால் வெற்றிலையைக் கலந்துகாட்டி, இரு தனத்தை - பெரிய செல்வத்தை, விளங்காமல் ஆக்கிவிட்டீர் - தெரியாமல் செய்துவிட்டீர் (அழித்துவிட்டீர் என்றபடி), இதுவும் நல்ல வேடிக்கை—, எ-று.

இளங்கால் - தென்றல். முதுகால்-முதுகின் பக்கமாகிய. ஐ-அழகு. இரு தனம் - இரண்டாகிய முலை. (௪௧)

ஒளியார் மதியு மிரவியுந் தேயு முயர்பொழில்வாய்
களியார் திருச்செண்டை யையாத் துரையின் கனவரையில்
தெளிவாந் தனங்க ளிருக்கவு மேழைத் திறத்தொடுபல்
அளியாக வோதித் தெரிவித்த தேன்சொலு மாரணங்கே.

(இ-ள்.) ஒளியார் - பிரகாசம்பொருந்திய, மதியும் - சந்திரனும், இரவியும் - சூரியனும், தேயும் - உராய்கின்ற, உயர் - உயர்ந்த, பொழில் வாய் - பொழில்களில் வாய்ந்த, களி ஆர் - தேன்கள் பாயும், திரு - செல்வம் பொருந்திய, செண்டை - செண்டத்தூரில், ஐயாத்துரையின்-ஐயாத்துரையென்னும் பிரபுவினது; கனவரையில் - பெரிய மலையின்கண்ணே, தெளிவாம் தனங்கள் இருக்கவும் - தெளிவாகிய தனங்கள் இருக்கவும், ஏழைத்திறத்தோடு—, பல் - வகையாகிய, அளியாக - அன்பாக, ஓதி - சொல்லி, தெரிவித்தது என்—, சொலும் - சொல்லும், ஆரணங்கே—, எ-று.

தெளிவு - மதர்ப்பு. தனங்கள் - குசங்கள். ஏழை - பேதை. பல் அளி - பலவண்டுகள். ஓதி - அளகபாரம். திரவியமிருந்தும் ஏழ்மைத் திறத்தைக் காட்டி அன்போடு தெரிவித்தீர் என்பதாம். (௪௨)

க்ஷீரம் மதித்திட்ட மானிக ரையாத் துரைகிரிபால்
மாரன் குடைமுடி நீள்சிலை நாண்கணை மன்னுமணித்
தேரின் னலங்களுங் காணவந் தேற்குமுன் செப்புமழைக்
காரம் படைத்தவன் னான்கரி வந்ததென் காரணமே.

(இ-ள்.) க்ஷீரம் - திருப்பாற்கடலை, மதித்திட்ட-கடைந்திட்ட, மால் நிகர் - திருமாலையொத்த, ஐயாத்துரை கிரிபால் - ஐயாத்துரையென்னுஞ் சீமானது மலையினிடத்து, மாரன் - மன்மதனது, குடை - குடையும், முடி - முடியும், நீள் சிலை - நீண்டவில்லையும், நாண் - நாணியையும், கணை - அம்பையும், மன்னும் - நிலைபொருந்திய, மணி - மணிகள்கட்டிய, தேரின் - தேரினது, நலங்களும் - அழகுகளையும், காண - காணும்பொருட்டு, வந்தேற்கு-வந்த எனக்கு, முன் - முன்பாக, அன்னான் - அம்மன்மதனது, செப்பும் - சொல்லுகின்ற, மழை கார் அம் படைத்த - மழைபெய்கின்றமேகத்தினது அழகைக்கொண்ட, கரி - யானையானது, வந்தது என் காரணம் - வந்துமறித்தது என்னகாரணம், எ-று.

மாரனது குடை - சந்திரன் (முகம்). முடி - கிரீடம் (முலை). சிலை - வில் (புருவம்). நாண் - வண்டு (கண்கள்). கணை-அம்பு. முல்லை - பற்கள். தேர் - அல்குல். கரி - யானை. மேகம் - கூந்தல். (௪௩)

சுரும்பண்ணல் செய்யு மலர்சோலை செண்டைவாழ் தூயனளிர்
கருப்பண்ண லொக்குமை யாத்துரைக் கோன்கன கச்சிலம்பீர்
விருப்புள்ள வேலூர் கலசப்பாக் கம்நீவிர் வெற்றிகொள
அரிப்பள்ளிக் கொண்டையை யான்தனித் தாள்வ தறமல்லவே.

(இ-ள்.) சுரும்பு - வண்டுகளானவை, அண்ணல் செய்யும் - பொருந்துகின்ற, மலர் - மலர்களையுடைய, சோலை - சோலைகள் சூழ்ந்த, செண்டை வாழ் தூயன் - செண்டத்தூரில் வாழும் பரிசுத்தன், நளிர் - அழகிய, கரும்பு அண்ணல் - கரும்பை வில்லாகவுடைய மன்மதனை, ஒக்கும் - ஒப்பிடுகின்ற, ஐயாத்துரை கோன் - ஐயாத்துரையென்னும் பிரபுவினது, கனகச்சிலம்பீர்—, விருப்புள்ள வேலூர் - யாவராலும் விரும்பப்படுகின்ற வேலூரும், கலசப்பாக்கம் - கலசப்பாக்கமும், நீவிர் - நீங்கள், வெற்றிகொள்ள - ஜயங்கொள்ள, யான்—, அரிப்பள்ளி கொண்டையை - விஷ்ணுபள்ளிகொண்ட பள்ளிகொண்டையை, தனித்தாள்வது அறமல்ல - தனிமையாக ஆள்வது தருமமல்ல, எ-று.

வேலூர்-வேல்போன்ற கண்கள். கலசப்பாக்கம் - கலசம்போன்ற முலை. அரிபள்ளி கொண்டை - வண்டுகள் தூங்குதற்கிடமாகிய கொண்டை. (சச)

அகரத்தைக் கொண்ட விபவன் தகரத் தலையுளன்சொல்
ககரத்தைக் கொண்ட மன் னையாத் துரையின் கனகவெற்பீர்
வகரத்தின் மேலே யிகரத்தைக் காட்டி வஞ்சமின்றி
சிகரத்தைக் காட்டிப்பின் னால்மக ரங்காட்டல் செம்மையதே.

(இ-ள்.) அகரத்தைக்கொண்ட விபவன் - அஷ்ட ஐசுவரியங்களையுடையவன், தகரத்தலையுளன் - கல்வியில் ஆயிரஞ்சிரங்களோடுகூடிய ஆதிசேடன், சொல்-சொல்லின், ககரத்தைக் கொண்ட மன்-ஒரேசொல்லை யுடையவனாகிய அரிச்சந்திரன், ஐயாத்துரையின் - ஐயாத்துரையென்னும் பிரபுவினது, கனக வெற்பீர்—, வகரத்தின்மேலே - வகரமென்னும் அக்கரத்திற்குமேல், இகரத்தை காட்டி - இகரமென்னும் அக்கரத்தைக்காட்டி, வஞ்சம் இன்றி-வஞ்சத்தனமில்லாமல், சிகரத்தைக்காட்டி—, பின்னால்-பின்பு, மகரம் காட்டல் - மகரத்தைக்காட்டுதல், செம்மையது - நன்மையாகும், எ-று.

அகரம் - இலக்கத்தில் எட்டு. ஐசுவரியம்: இராஜாங்கம், மக்கள், சுற்றம், பொன், மணி, நெல், வாகனம், அடிமை. தகரம் - ஆயிரமென்னும் இலக்கம். வகரம் - கால் என்னும் இலக்கம். காலுக்கு மேல்பிரதேசமாகிய, இகரம் - (இ-உ) அரையென்னும் இலக்கம் (அரை - அல்குல்). சிகரம்-மலை (முலை). பின் நால் - பின்னேதொங்குகிற. மகரம் - பூந்தாதோடுகூடிய அளகபாரம். ()

சேலூர் வயற்செண் டையையாத் துரையின் செழுங்கிரியில்
வேலூர் விழிமட மானேயா னென்று விளம்புவன்கேள்
பாலூர் திருமலைக் குப்பத் தெழில்வளம் பார்த்ததற்பின்
நாலூரைக் காணலா முன்பிதைக் காண னலமலவே.

(இ-ள்.) சேலூர் வயல் - சேல்கெண்டைகள் உலாவுகின்ற கழனிகள் சூழ்ந்த, செண்டை - செண்டத்தூரில் வாழ்கின்ற, ஐயாத்துரையின் - ஐயாத்துரையென்னும் பிரபுவினது, செழுங்கிரியில் - செழியமலையினிடத்து, வேலூர் - வேலாயுதத்தைப் பொருந்திய, விழி-கண்களையுடைய, மடமானே -

இளமைபொருந்திய மான்போன்றவளே, யான் ஒன்று விளம்புவன் கேள் - யானொன்று சொல்லுவன் கேட்பாயாக, பாலூர் திருமலைக் குப்பத்து-பாலூர் திருமலைக் குப்பத்தினது, எழில் - அழகையும், வளம் - வளப்பத்தையும், பார்த்து - கண்டு, அதன்பின் - பிறகு, ஆலூரை - ஆலத்தூரை, காணலாம் - பார்க்கலாம், முன்பு இதை காணல்-இதை முன்னால் பார்க்குதல், நலம் அல்ல-நல்லது அல்ல, எ-று.

பாலூர் - பால்பொருந்திய, திருமலை - அழகியமலைபோன்ற, குப்பம் - திடர் (முலை). பின் - பின்புறமாக, நால் - தொங்குகிற, ஐ - அழகு (கூந்தல்). (சசு)

முத்திர மான தமிழ்வா ணருக்கு முகமனொடு
வத்திர மானவு மீயுமை யாத்துரை வண்கிரிநேர்
சித்திரம் வாய்ந்த வடமலைத் தானஞ் சிறந்திடுநல்
லுத்தரந் தானோ மொழிவாய் வகையொடு முத்தரமே.

(இ-ள்.) முத்திரமான-இயல் இசை நாடகமென்னு மூன்றுவகையாகிய, தமிழ் வாணருக்கு - தமிழ்வித்துவான்களுக்கு, முகமனொடு - சந்தோஷகரத்துடனே, வத்திரமானவும் - வஸ்திரமுதலாகிய பலவும், ஈயும்-கொடுக்காநின்ற, ஐயாத்துரை-ஐயாத்துரையென்னும் சீமானது, வண் கிரி நேர் - வளப்பமாகிய மலையையொப்பாகிய, சித்திரம் - அழகானது, வாய்ந்த - வாய்க்கப்பெற்ற, வடமலைத்தானம் - வடமலையென்னுந் தானமானது, சிறந்திடு நல் உத்தரந்தானோ- சிறப்போங்கிய நல்ல உத்தரதிசைதானோ, மொழிவாய் - சொல்லுவாய், வகையொடும் - வகையாக, உத்தரம் - பதில் உத்தரவு, எ-று.

வடம் - முத்துமாலை. மலை - தனம். உத்தரம் - பின்புறம் (முதுகு). பெண்ணே! போகத்திற்கு உரித்தாகிய தனமிருப்பது முதுகின்பக்கமோ என்பது கருத்து. (சஎ)

வானைத் தருவினை சிந்தா மணியை வளர்நிதியை
ஆனைப் பொருவுமை யாத்துரைப் பூப னணிவரையீர்
தேனை யுமிழ்மலர் சோலையைக் காட்டித் திறமிகுந்த
ஆனையைப் பூக்கச்சி னாலே பிணித்த ததிசயமே.

(இ-ள்.) வானை-மேகத்தை, தருவினை-பஞ்சதருக்களை, சிந்தாமணியை—, வளர்நிதியை - வளரும்படியாகிய இருநிதியை, ஆனை - காமதேனுவை, பொருவும்-வரையாது கொடுத்தலினால் ஒப்பாகிய, ஐயாத்துரைப்பூபன் - ஐயாத்துரையென்னுஞ் சீமானது, அணிவரையீர் - அழகிய மலையையுடையவரே, தேனை-தேன்களை, உமிழ் - சிந்துகின்ற, மலர் சோலையை காட்டி—, திறம் மிகுந்த - வல்லமைமிகுந்த, ஆனையை—, பூ கச்சினாலே - மெல்லியகச்சினாலே, பிணித்தது - கட்டியது, அதிசயம்—, எ-று.

சோலை - கூந்தல். ஆனை - தனம். கச்சி - இரவிக்கை. (சஅ)

தொடிபோட்ட செங்கர வல்லியர் கண்டுளஞ் சொக்குமெழிற்
படிபோட்ட வாணழ கையாத் துரையின் பனிவரையில்
பிடிபோட்ட நுண்ணிடைப் பேதைவே ளென்னுடன் பூசலிட
முடிபோட்டு விட்டனை யென்பாவ மாமடி மொய்குழலே.

(இ-ள்.) தொடிபோட்ட - வளையல்களையணிந்த, செங்கரவல்லியர்-சிவந்த கைகளையுடைய கொடிபோன்ற மங்கையர்கள், கண்டு உள்ளம்—, சொக்கும்-சொக்குகின்ற, எழில் படிபோட்ட - இளமையாகிய தன்மையமைந்த, ஆண் அழகு-ஆண்டன்மைவாய்ந்த, ஐயாத்துரையின் - ஐயாத்துரையென்னுஞ் சீமானது, பனிவரையில் - குளிர்ந்த மலையின்கண்ணே, பிடிபோட்ட நுண்ணிடை-பிடியளவாகிய நுண்ணிய இடையையுடைய, பேதை மொய்குழலே - பேதையாகிய வண்டுகள் மொய்க்குங் கூந்தலையுடையவளே, என்னுடன்—, வேள் பூசலிட - மன்மதன் சண்டைசெய்ய, முடிபோட்டுவிட்டனை - முடிபோட்டு விட்டாய், என் பாவம் ஆமடி - என்ன அபிப்பிராயம் ஆகும் அடி, எ-று.

எனக்கும் மன்மதனுக்கும் சண்டையை மூட்டிவிட்டாய் என்றும் உன் முன்பக்கத்துளதாகிய பொருளைக் கொடாமையால் மன்மதன் என்னுடன் போர்செய்யக் கூந்தலை முடித்துத் தொங்கவிட்ட முதுகைக் காட்டினாயென்றும் பொருள்கொள்க. (௪௯)

சீதம் பயிலு மலர்மலி சோலைச் செறிசெண்டைவாழ்
நாதன் றிருவுறை யையாத் துரையி னகமனையீர்
ஓதம் புவியை மதித்திடு மாதன மொக்கக்கொண்டு
கீதஞ் சொலிக்கொடுத் தீரிது வுநல்ல கீர்த்தியதே.

(இ-ள்.) சீதம் - மேகங்களானவை, பயிலும் - தவழ்கின்ற, மலர்-மலர்களானவை, மலி - மலிந்த, சோலை - நந்தவனங்கள், செறி - நெருங்கிய, செண்டை வாழ் - செண்டத்தூரின்கண்ணே வாழாநின்ற, திரு உறை நாதன் - ஸ்ரீதேவிபொருந்திய மார்பையுடைய நாதனாகிய புருஷோத்தமன், ஐயாத்துரையின் - ஐயாத்துரையென்னுஞ் சீமானது, நகம் அனையீர் - மலையை யொப்பவரே, ஓது அம்புவியை - சொல்லும்படியாகிய அழகிய உலகத்தை, மதித்திடும் - மதிக்கப்பெறுகின்ற, மாதனம் - பெரியதனங்களை, ஒக்கக்கொண்டு - ஒருங்குகொண்டு, கீதம் சொல்லிக்கொடுத்தீர்—, இதுவும் நல்ல கீர்த்தி—, எ-று.

மாதனம் - அழகிய தனம். கீதம் - வண்டுகள் (அளகபாரம்). தனத்தை நீ கொண்டு கூந்தலைக்காட்டினாய் என்பது கருத்து. (௫௦)

உவராடு நீரார் கடலாடைப் பூவி லுயர்ந்தசெண்டைப்
புவியாளு மன்னனை யாத்துரைப் பூபன் பொருப்பதனில்
சுவரேறு பாசிகை காட்டிவெஞ் சூதிலை யென்றுசொலிக்
கவரு டுவதெவன் கிஞ்சுக மென்மொழிக் காரிகையே.

(இ-ள்.) உவர் ஆடு நீர் ஆர்-உப்போடுங்கூடிய நீர்நிறைந்த, கடல் ஆடை - சமுத்திரமாகிய வஸ்திரத்தையுடுத்த, பூவில் - பூமியின்கண், உயர்ந்த - உயர்

வாகிய, செண்டைப்புவி - செண்டத்தூரென்னும் நகரை, ஆளும் மன்னன் - ஆளப்பட்ட அரசன், ஐயாத்துரைப்பூபன் - ஐயாத்துரையென்னுஞ் சீமானது, பொருப்பதனில் - மலையின்கண்ணே, கவறு ஓடு பாசிகை - வற்றிய புறண்டேநின்ற பாசிகையை, காட்டி - காண்பித்து, வெம் சூது இல்லை என்று சொல்லி - வெவ்விய சூதுக்காயில்லையென்று சொல்லி, கவறு ஆடுவது எவன் - சொக்கட்டானுடுவது என்னகாரணம், கிஞ்சுக மெல் மொழி காரிகையே-கிளிபோன்ற மிருதுவாகிய சொற்களையுடைத்தாகிய பெண்ணே, எ-று.

பாச்சிகை - சூதாடுகருவி. சூது - எண்ணிவைக்குங்காய். கவறு - சூது. சுவல் - முதுகு. தோடு - பூவிதழ். பா - அழகு. சிகை - மயிர்முடி. சூது - சூதுக்காய் (தனம்). கவறு - வஞ்சம். போகத்திற்கு உரித்தல்லாத கூந்தலைக் காட்டித் தனத்தை மறைத்து வஞ்சம்புரிவது என்னகாரணம் என்பது கருத்து. (ருக)

பால்காட் டியசொலன் சீர்வளர் செண்டைப் பதிக்கிறைவன்
மால்காட் டியகர னையாத் துரையின் மணிவரையில்
கால்காட்டி மற்றிருக் கால்காட்டி காணிமுக் காணிதனை
மேல்காட் டியபினைம் பால்காட்டி னல மெல்லியலே.

(இ-ள்.) பால் காட்டிய சொலன்-பாலைப்போன்ற சொல்லையுடையவன், சீர் வளர் செண்டைப்பதிக்கு இறைவன் - சிறப்புவாய்ந்த செண்டத்தூரிலிருக்கிறைவன், மால் காட்டிய கரன் - மேகத்தைப்போன்ற கையையுடையவன், ஐயாத்துரையின் மணிவரையில்—, கால் காட்டி - வாய்க்காலைக்காட்டி, மற்று இருக்கால் காட்டி - மற்றும் இரண்டுகால்வாயின் வளத்தைக்காட்டி, காணி - நிலமானது, முக்காணி - முக்கால்காணி, மேல்காட்டிய பின் - மேல்பாகமாகக் காட்டியபிறகு, ஐம்பால் - ஐவகை பகுப்பாகிய நிலங்களை, காட்டினல் நலம் - காட்டினல் நன்மை, மெல்லியலே - மிருதுவாகிய சாயலையுடையவளே, எ-று.

கால்-தொடைப்ரதேசம். இருகால்-அரை (அல்குல்). ஃ-சமஸ்கிருதத்தில் ம. முக்காணி எழுத்தில்-லை (சுறு) ஆகவே இரண்டுங் கூடியது மலை (தனம்). அன்றி காணியும் முக்காணியும் ஒருமாவென்றுயது. மாவடுபோன்ற கண் எனினும் அமையும். ஐம்பால் என்றது ஐந்து நிலத்திற்கும், ஐந்து வகுப்பாகிய கூந்தலுக்குங் கொள்க. (ருஉ)

சரிக மபத நிதம்பெய்யுஞ் செண்டைத் தனிநகர்வாழ்
சரிக மபத நிலைகொளை யாத்துரை தானுவில்சஞ்
சரிக மபதநி காட்டிய வாறுகைத் தாளந்தந்தால்
சரிக மபதனிப் பண்கொண்டு பாடுவன் றையலரே.

(இ-ள்.) சரி - கூட்டமாகிய, கம் - மேகங்களானவை, அபதம் - அவ்வப் பருவத்துக்கேற்ப முயற்சியோடு, நிதம் - எக்காலத்தும், பெய்யும் - பெய்யாநின்ற, செண்டைத் தனி நகர் வாழ் - செண்டத்தூரொன்னும் ஒப்பற்ற நகரின்கண்ணே வாழ்கின்ற, சரி - நிதானமென்னும், கமம் - நிறைவாகிய, பதம் -

சொல்லினது, நிலைகொள் - குணத்தைக்கொண்ட, ஐயாத்துரை-ஐயாத்துரையென்னும் பிரபுவினது, தாணுவில் - மலையின்கண்ணே, அபதம்-பொய்போ விருண்ட, சஞ்சரிகம்-வண்டாகிய இசையை, நீ - நீ, காட்டியவாறு-காட்டிய மாதிரி, கைதாளம் தந்தால் - கைதாளத்தைக் கொடுத்தால், சரிகமபதனி பண் கொண்டு பாடுவன்-சரிகமபதனி என்னும் சுரங்களோடு பாடுவன், தையலரே-தையலரே, எ-று.

சஞ்சரிகம் - வண்டு (அளகபாரம்). தாளம் - தனம். (ருங)

சுபசோ பனங்க டினந்தின மோங்கிடு தூயசெண்டை
உபகார னையாத் துரைராஜ சேகர னோங்கறனில்
கபடூகங் கொண்டு குடமும் பணமுங் கவர்ந்ததினால்
அபராதந் தந்தனை யோமட மாமயி லாரணங்கே.

(இ-ள்.) சுபசோபனங்கள் - நன்மையாகிய சந்தோஷகரம், தினம் தினம் ஓங்கிடு - நித்தநித்தமும் நிகழ்கின்ற, தூய செண்டை - பரிசுத்தமாகிய செண்டத்தூரில், உபகாரன் - தன்னை வந்தடைந்தவர்களுக்கு உபகாரஞ் செய்யப்பட்டவன், ஐயாத்துரைராஜசேகரன் - ஐயாத்துரையென்னும் பிரபுவினது, ஓங்கல்தனில்-மலையின்கண்ணே, கபடு ஊகம் கொண்டு-கபடமாகிய எண்ணத்தைக்கொண்டு, குடமும் பணமும் - குடத்தையும் பணத்தையும், கவர்ந்ததினால் - மறைத்ததினால், அபராதம் தந்தனையோ - அபராதங் கொடுத்தாயோ, மடம் மா மயில் ஆரணங்கே - இளமைபொருந்திய அழகிய மயில் போன்ற ஆரணங்கே, எ-று.

கபடு - வஞ்சம். ஊகம் - எண்ணம். குடம் - தனம். பணம் - அல்குல். அபரம் - முதுகு, ஆதம் - கூந்தற்பனை. (ருச)

சொரிகா ரிருநிதி யைந்தரு தீம்பால் சுரபியென
வருகாவ லன்செண்டை யையாத் துரையின் வளங்கிரியீர்
நுரைகான் மதுமலர் சோலையில் வெங்காம நோய்தனக்கு
பரிகாரந் தந்ததால் பண்டித ரென்றுமைப் பன்னுவனே.

(இ-ள்.) சொரி கார் - சொரியும்படியாகிய மேகத்தையும், இரு நிதி - பெரிய நிதிகளையும், ஐந்தரு-பஞ்சதருக்களையும், தீம்பால் சுரபி-தித்திப்பாகிய பாலைக்கொடுக்குங் காமதேனுவையும், என வரு காவலன் - நிகரென்று அவதரித்த அரசன், செண்டை ஐயாத்துரையின்-செண்டத்தூர் ஐயாத்துரையென்னும் பிரபுவினது, வளம் கிரியீர்-வளம்பொருந்திய மலையிலுள்ளவரே, நுரை கால் மது மலர் சோலையில் - நுரையோடுங்கூடிய தேன்பொருந்திய பூக்கள் நிறைந்த நந்தவனத்தில், வெம் காமநோய் தனக்கு - வெவ்விய காமவியாதிக்கு, பரிகாரம் தந்ததால்-வைத்தியஞ்செய்ததால், பண்டிதர் என்று உமை சொல்லுவன்—, எ - று.

பரிகாரம் - அளகபாரம். (ருரு)

ஏற்பார் தமக்கிலை யென்னு தளிக்கு மிருநிதிக்கோன்
நாப்பா மகளை மணந்திடு சேடன் நதியளித்த
பூப்பா லகர்குல வையாத் துரையின் பொருப்பனையீர்
பார்ப்பார் குயவர் மறைந்தா ரிருளர் பரவினரே.

(இ-ள்.) ஏற்பார் தமக்கு - யாசிப்பவர்களுக்கு, இல்லை என்னாது அளிக்கும் - இல்லையென்னுமல் கொடுக்கும், இருநிதிக்கோன் - குபோன், நா பா மகளை-பிரமனது நாவின்கண் பொருந்திய சரச்சுவதியை, மணந்திடு சேடன்-மணம்புரிந்த ஆதிசேடனுக்கொப்பானவன், நதியளித்த-கங்கைதரப்பட்ட, பூபாலகர்குல - பூவைசியர்களது குலத்திலவதரித்த, ஐயாத்துரையின் பொருப்பனையீர் - ஐயாத்துரையென்னுஞ் சீமானது மலையையொப்பவரே, பார்ப்பார் குயவர் - பார்ப்பாரும் குயவர்களும், மறைந்தார் - மறைந்துவிட்டனர், இருளர் பரவினர் - இருளர் பரவினர், ஏ - என்னை அதிசயம், எ-று.

பார்ப்பார்-கண்கள். குயவர்-தனங்கள். இருளர்-இருள்போன்ற கூந்தல்.

நச்சூ ரெயிற்றர வைக்கிழிக் குஞ்சிகி நன்கிவர்ந்துப்
பொய்ச்சூர் தடிந்தவே ளொக்குமை யாத்துரை பொங்கருளீர்
கச்சூர் திருவல்லம் விற்கோல மூறலைக் கண்டதற்பின்
செச்சூருந் தண்டலை நீணெறிக் காண்டலுஞ் செம்மையதே.

(இ-ள்.) நச்சூர் - விடம்பொருந்திய, எயிற்று-பற்களையுடைய, அரவை-சர்ப்பத்தை, கிழிக்கும்-கொல்லாநின்ற, சிகி-மயிலை, நன்கு இவர்ந்து - நன்மையோடு ஆரோகணித்து, பொய் சூர் - பொய்மைகுணம்பொருந்திய அசுராதிகளை, தடிந்த கொன்றருளிய, வேள் ஒக்கும் - சுப்பிரமணியரைநிகர்த்த, ஐயாத்துரை - ஐயாத்துரையென்னுஞ் சீமானது, பொங்கர் உள்ளீர் - மலையிலுள்ளவரே, கச்சூர் - திருக்கச்சூரும், திருவல்லம் - திருவல்லமும், விற்கோலம் - திருவிற்கோலமும், ஊறலை - திருவூறலையும் (தக்கோலத்தையும்), கண்டு அதன்பின்—, செச்சையூரும்-வெட்சிமரங்கள் பொருந்திய, தண்டலை நீணெறி காண்டலும் - திருத்தண்டலை நீணெறிக்காண்டலும், செம்மையது - அழகியது, எ-று.

கச்சு - இரவிக்கை, ஊர் - பொருந்திய, திரு - மேன்மையாகிய, வல் அம் - சூதுக்காய்போன்ற அழகு (முலை). விற்கோலம் - வில்போன்ற புருவமும் அம்புபோன்ற அழகிய கண்களும். ஊறல் - அதரபானம். செச்சை - பரிமளச்சாந்து. தண்டலை நீள் நெறி - பூந்தோட்டம்போன்ற நீண்ட ஒழுங்கு (அளகபாரம்). (ருஎ)

வறந்திடு லோபரைப் பாடா திரும்பொன் வழங்கிபுகழ்
சிறந்திடு மையாத் துரைராஜ தீரன் சிலம்பதனில்
மறந்தரு மேமதன் பூசலி லேதுணை மாடலின்றி
புறந்தா லானும் மகத்தினிற் சூதுண்டு பூங்கொடியே.

(இ-ள்.) வறந்திடு லோபரை-அற்பத்தனத்தோடுங்கூடிய உலோபர்களை, பாடாது - பாடவொட்டாமல், இரும்பொன் வழங்கி - பெரிய செல்வத்தை வித்துவான்களுக்குக் கொடுத்து, புகழ் சிறந்திடும் - கீர்த்தியில் சிறந்த, ஐயாத்துரைராஜதீரன்—, சிலம்பதனில் - மலையின்கண்ணே, மறம் தரும் - கொலைத்தொழிலைச்செய்யும், ஏமதன் - அம்புகளையுடைய மன்மதனது, பூசலிலே-சண்டையிலே, துணைமாடல் இன்றி - உதவிசெய்தலையின்றி, புறந்தரலால் - புறங்கொடுத்ததால், நம் அகத்தினில் சூதுண்டு - நமது நெஞ்சில் சூதுத்தன்மையுண்டு, பூ கொடியே - புட்பக்கொடிபோன்றவரே, எ-று.

புறந்தறல் - முதுகுகாட்டல். அகம்-மார்பு. சூது - சூதுக்காய் (முலை). ()

வேலைக் கரத்தெடுத் துண்டோ னறுந்தமிழ் விற்பனத்திற்
சேலை நிகர்த்த வெழில்கொள்ளு மையாத் துரைச்சிலம்பீர்
காலை யிருக்கா லுட் டானத்தி லுள்ளதைக் காணுமுனே
மாலை யிருள்வந்து வாய்த்தது நந்தம வல்வினையே.

(இ-ள்.) நறுந்தமிழ் விற்பனத்தில் - நல்லதமிழினது புலமையில், வேலை கரத்து எடுத்து உண்டோன் - சமுத்திரத்தினது நீரைக் கையிலெடுத்து ஆசமனஞ்செய்த அகத்தியன், சேல் ஐ நிகர்த்த - மீனக்கொடியையுடைய மன்மதனுக்கொப்பாகிய, எழில் கொள்ளும்-அழகைக்கொண்ட, ஐயாத்துரை சில் பீர்-ஐயாத்துரையென்னுஞ் சீமானது மலையிலுள்ளவரே, காலை இருக்கால் - பிராதக்காலத்தில் வேததியானத்தோடு, உட்டானத்தில் உள்ளதை-மூலஸ்தானத்திலுள்ளதை, காணுமுன்னே-காண்பதற்குமுன்னே, மாலை இருள் வந்து வாய்த்தது—, நந்தமது வல்வினை - வலிய வினையாகும், எ-று.

கால், ஐகால், இருகால் ஆக இலக்கம் இரண்டு (உ) உகாரம் உள்ளஸ்தானம் இருதயம், அங்குள்ளது சிகரம் (முலை). மால் - மயக்கந்தருவதாகிய, ஐ - ஐந்து பகுப்பாகிய, இருள் - கூந்தல். (ருக)

துஞ்சாப் பெரும்புக ழாளன் றிருமுரு கப்பன்சுதன்
மஞ்சா டியகர னையாத் துரையின் வரையனையீர்
பஞ்சாக் கரத்தி னடுவின் பயனைப் பகர்தலின்றி
மஞ்சாகை யின்வளங் காட்டத் தகுங்கொல்காண் மாதவர்க்கே.

(இ-ள்.) துஞ்சா பெரும் புகழாளன் - கெடாத பெரியபுகழையுடையவன், திருமுருகப்பன் சுதன் - செல்வம்பொருந்திய முருகப்பமகிபனது குமாரன், மஞ்சு ஆடிய கரன் - வாடிய பயிர்களுக்கு நீரை வரையாது சொரிகின்ற முகிலையொத்த கரத்தையுடையவன், ஐயாத்துரையின் - ஐயாத்துரையென்னுஞ் சீமானது, வரையனையீர் - மலையையொப்பவரே, பஞ்சாக்கரத்தின்—, நடுவின் பயனை—, பகர்தலின்றி - சொல்லுவதின்றி, மஞ்சாகையின் வளம் - மகரமாகிய மந்திரத்தினது வளத்தை, காட்டத்தகுங்கொல்காண்—, நல் மாதவர்க்கு - நல்ல முனிவருக்கு, எ-று.

பஞ்சாக்கரம் - நமசிவய. நடுவெழுத்து சிகரம் (தனம்). ம - மகரம், மகரந்தம், சாகை - இடம், மகரந்தம் தங்குவதற்கிடமாகிய (கூந்தல்). மாது அவர் - பெண்களாகியவர். கலவிக்குரித்தாகிய தனத்தைக் காட்டாமல் கூந்தலைக்காட்டினுயென்பது கருத்து. (௬0)

தமதகந் தேடி வருவாரைத் தம்மவ ராகநினைந்
தமுது படைத்திடு மையாத் துரையி னணிவரையீர்
நுமதகந் தேடி களைகொண்டு வந்ததை நோக்கிநல்ல
அமுதுகை தந்தீ ரதனுல் கொடும்பசி யாறிடுமே.

(இ-ள்.) தமது அகம் தேடி வருவாரை - தமது மனையை நாடிவருபவர்களை, தம்மவராக நினைந்து - தமது சுற்றத்தவர்களைப்போல நினைந்து, அமுது படைத்திடும் - அன்னத்தைப்படைக்கும், ஐயாத்துரையின்-ஐயாத்துரையென்னுஞ் சீமானது, அணிவரையீர் - அழகிய மலையிலுள்ளவரே, நுமது அகம் தேடி - உமது மனையை நாடி, களைகொண்டு வந்ததை - ஆயாசங்கொண்டு வந்ததை, நோக்கி - பார்த்து, நல்ல அமுது கை தந்தீர் - நன்மையாகிய அமுதைக் கையில் கொடுத்தீர், அதனுல்—, கொடும்பசி-கடோமாகிய பசி, ஆறிடும் - நீங்கிவிடும், எ-று.

அம் முதுகை-அழகிய முதுகை, அதனுல்—, கொடும்பசி யாறிடும் ஏ - கடோமாகிய காமவிடாய் தீருமோ தீராது என்பது கருத்து. (௬௧)

உரங்காட்டு தோளான் றிருமண வாளன் உயர்கலையின்
சிரங்காட்டு விற்பன னையாத் துரையின் சிலம்பிர்சம
பரங்காட்டி வெப்பக் கடலின் கரைபெறப் பன்னுமது
கரங்காட்டி னீரிந்த வேளையி லீது நற் காரியமே.

(இ-ள்.) உரம் காட்டு தோளான் - வலியைக்காட்டுந் தோளையுடையவன், திரு மணவாளன் - இலக்குமிக்கு நாயகன், உயர் கலையின் சிரம் காட்டு விற்பன்னன் - உயர்ந்த சாத்திரத்தின் முடிவைக்கண்ட புலமையன், ஐயாத்துரையின் - ஐயாத்துரையென்னும் பிரபுவினது, சிலம்பிர் - மலையிலுள்ளவரே, சமபரம் காட்டி-நடுநிலையாகிய உண்மையைக்காட்டி, வெப்பக்கடலின் கரைபெற - வெப்பமாகிய சாகரத்தின் கரையைப் பெறும்படி, பன் உமது கரம் காட்டினீர் - சொல்லும்படியாகிய உமது கரத்தைக் காட்டினீர், இந்த வேளையில் ஈது நற் காரியம்-இந்தச் சமயத்தில் இது நல்ல காரியம், எ-று.

சம் அபரம் - அழகிய முதுகு. வெப்பக்கடல் - காமவாதனையாகிய துன்ப சாகரம். பன்னு மதுகரம் காட்டினீர்-சொல்லும்படியாகிய வண்டைப்போன்ற கூந்தலைக் காட்டினீர். (௬௨)

மெச்சுங் கவிப்புல வாணர்சொன் மாலை விழைந்தவர்கள்
அச்ச மறப்பொன் றருகர னையாத் துரைவரையீர்
மச்சங் கலிங்க மலையாளம் யவ்வன நீவிர்கொண்டு
நச்சு மெனக்கிந்த குந்தள மீவது நன்றலவே.

(இ-ள்.) மெச்சும் கவிப்புலவாணர் சொல் மாலை - அறிஞர்களால் மெச்சப்பட்ட கவிப்புலமையுடைய வித்துவான்கள் சொல்லும் பாமாலையை, விழைந்து - ஆசைகொண்டு, அவர்கள் - அவ்வித்துவான்களது, அச்சம் அற - சகலவித அச்சமும் நீங்க, பொன் தரு கரன்-பொன்னைக்கொடுக்குங் கரதலத்தன், ஐயாத்துரை வரையீர் - ஐயாத்துரையென்னுஞ் சீமானது மலையிலுள்ளவரே, மச்சம் கலிங்கம் மலையாளம் யவ்வனம் நீவிர்கொண்டு - மச்சம் கலிங்கம் மலையாளம் யவ்வனம் என்னும் நான்கு தேயத்தையும் நீங்கள் ஆளுகைப்பெற்று, நச்சும் என்க்கு இந்த குந்தளம் ஈவது - ஆசைகொண்டிருக்கும் எனக்கு இந்தக் குந்தளதேசம் ஒன்றை மாத்திரம் கொடுப்பது, நன்று அல்ல - நல்லது அல்ல, எ-று.

மச்சம் - மீன் (கண்கள்). கலிங்கம் - வஸ்திரம். மலை ஆள் அம் - மலையையடிமையாகக்கொண்ட அழகு (முலை). யவ்வனம் - யவனதிசை. குந்தளம் - கூந்தல். மச்சம்போன்ற கண்களையும் வஸ்திரத்தால் மூடிய தனத்தையும் யவ்வன பக்குவத்தையும் நீ கொண்டு கூந்தலைக் காட்டுதல் நல்லதல்ல என்பது கருத்து. (சுங)

அன்பா வினிய கவிக்கொரு பொன்கொடுத் தங்கைகொளும்
தென்பாண் டியனிக ரையாத் துரையின் சிலம்பனையீர்
ஐம்பா லிலக்கணங் கண்டாச்சு தையிரு காவியமும்
நும்பான்மற் றுள்ளதுங் காட்டிடி னவை நோக்குவனே.

(இ-ள்.) அன்பா - ஆசையுடனே, இனிய கவிக்கு - சுவையோடுங்கூடிய கவிதையொன்றுக்கு, ஒரு பொன் கொடுத்து - ஒருவராகனென்னும் பொன்னைக் கொடுத்து, அம் கைகொள்ளும் - அழகிய கையில் கொள்ளும், தென் பாண்டியன் நிகர் - தென்பாண்டியனையொத்த, ஐயாத்துரையின் - ஐயாத்துரையென்னுஞ் சீமானது, சிலம்பு அனையீர் - மலையை யொப்பவரே, ஐம்பால் இலக்கணம் கண்டு ஆச்சுது - எழுத்து சொல் பொருள் யாப்பு அணியென்னும் பஞ்ச இலக்கணங்களும் பார்த்து ஆச்சுது, ஐ காவியமும் - சீவகசிந்தாமணி சிலப்பதிகாரம் மணிமேகலை குண்டலகேசி வளையாபதி யென்னும் ஐந்து காவியங்களும், இரு காவியமும் - பாரத ராமாயணம் என்னும் இரண்டு காவியங்களும், நும்பான் மற்றுள்ளதும் - மற்றும் உமது இடத்திலுள்ளதையும், காட்டிடில் - காட்டிவிட்டால், நான் அவை நோக்குவன் - நான் அவைகளைப் பார்ப்பேன், எ-று.

ஐம்பால் இலக்கணம் - ஐந்து பகுப்பாகிய கூந்தலின் அழகு. ஐயிருகாவியம் - அழகிய நீலோற்பலம்போன்ற இரண்டு கண்கள். நும்பால் மற்றுள்ளது - அல்குல் ஸ்தானம். (சுச)

மேழிக் கொடியர்தங் கோத்திரன் சென்னை மினிர்நகரிற்
கோழிக் கொடியோ னெனவந்த வையாத் துரைக்குவட்டீர்
ஏழிற் பனிரெண்டி லோரிரண் டீரண் டேற்றுபினல்
பாழிப் பனிரெண்டி லொன்றெனக் கீந்தது பண்பலவே.

(இ - ள்.) மேழி கொடியர்தம் கோத்திரன்—, செண்டை மிளிர் நகரில்-செண்டையென்னும் ஒளிபொருந்திய நகரின்கண், கோழிக்கொடியோன் என வந்த - சுப்பிரமணியரையொப்ப அவதரித்த, ஐயாத்துரை குவட்டீர் - ஐயாத்துரையென்னுஞ் சீமானது மலையிலுள்ளவரே, எழில் ஓர் இரண்டு பனிரெண்டில் ஈரிரண்டு ஏற்று-எழில் இரண்டுபாகமும் பனிரெண்டில் நான்குபாகமும் கொண்டு, பின்னல் - பின்பு, பாழி பனிரெண்டில் ஒன்று எனக்கு ஈவது பண்பு அல்ல - பெருமைவாய்ந்த பன்னிரண்டில் ஒன்றை எனக்குக் கொடுப்பது தகுதியல்ல, எ - று.

எழில் இரண்டு - திங்கள் (முகம்). செவ்வாய் - அதரம். பனிரெண்டில் நான்கு-தனுசு (புருவம்). கும்பம் (முலை). மீனம் - கண்கள். சிங்கம் - இடை. பின்னல் - பின்னல் தொங்குகிற, பனிரெண்டில் ஒன்று - மகரம், மகரந்தங்களோடு கூடிய கூந்தல். (௬௫)

பந்தன மாமுலை பொன்னுக் குரமும் பகவதிக்குக்
கந்தன வாகிட மாத்தரு மையாத் துரைக்கடிபூம்
நந்தனந் தன்னின் மதராஜ கிரீடை நடக்குமுனே
சந்தனந் தந்தா னலமாம் பினேதுக்குத் தையலரே.

(இ-ள்.) பந்து அன்ன மா முலை - பந்தைப்போன்ற அழகிய முலையையுடைய, பொன்னுக்கு உரமும் - இலக்குமிக்கு மார்பையும், பகவதிக்கு - வீரச்செல்விக்கு, கந்து அன்ன வாகு - தூண்போன்ற புயத்தையும், இடமாத்தரும் - வாசஸ்தானமாகக் கொடுக்கும், ஐயாத்துரை - ஐயாத்துரையென்னுஞ் சீமானது, கடி பூ நந்தனந்தன்னில் - வாசனைபொருந்திய பூக்கள் மலிந்த நந்தவனத்தின்கண்ணே, மதராஜ கிரீடை நடக்குமுன் - மன்மதகிரீடை நடப்பதற்கு முன்பாக, சந்தனம் தந்தால் நலமாம் - சந்தனங்கொடுத்தால் நன்மையாகும், பின் ஏதுக்கு - பின்பு யாதுக்கு, தையலரே—, எ-று.

சம் தனம் - அழகிய முலை. பின் - முதுகு. (௬௬)

தெள்ளா ரமுதத் தமிழ்ப்பயி லையாத் துரைச்சிலம்பில்
விள்ளாங் கரவுங் குடங்கொண்டு மாமோடி வித்தைதனை
உள்ளா தியற்றப் பெருவலி கொண்ட வுமக்கலது
புள்ளாங் குழலெனக் கேதுக்கு சொல்லடிப் பூங்கொடியே.

(இ-ள்.) தெள் ஆர் அமுத தமிழ் பயில் ஐயாத்துரைச் சிலம்பில் - தெளிந்து நிறைந்த அமுதத்துக்கொப்பாகிய தமிழாராய்ச்சி செய்த ஐயாத்துரையென்னுஞ் சீமானது மலையின்கண்ணே, விள் ஆங்கு அரவும் - சொல்லும்படியாகிய பாம்பும், குடம் கொண்டு - குடத்தையுங் கொண்டு, மா மோடி வித்தைதனை - பெரிய மோடிவித்தையை, உள்ளாது இயற்ற - அஞ்சாமல் செய்ய, பெருவலி கொண்ட உமக்கு அல்லது - பெரிய வல்லமையைக்கொண்ட வுமக்கு அல்லது, புள்ளாங்குழல் எனக்கு ஏதுக்கு—, சொல்லடி பூங்கொடியே—, எ - று.

அரவு - அல்குல். குடம் - முலை. மாமோடிவித்தை - பெரிய பிணக்காகிய வித்தை. புள்ளாங்குழல் - வண்டோடுங்கூடிய கூந்தல் (௬௭)

அருட்டிரு வாடற் புராணமுந் தொண்ட ரருங்கதையும்
பொருட்டிற நோக்குமன் னையாத் துரையின் பொருப்பதனில்
தெருட்டரு மாகிரி சங்கர பூடணஞ் செப்பிடென்றால்
சுருட்டியு மோகனஞ் சொல்லிவிட் டாயடி தோகையரே.

(இ-ள்.) அருள் திருவாடல் புராணமும் - சிவபிரானது அருட்டிருவிளையாட்டாகிய புராணமும், தொண்டர் அருங்கதையும் - திருத்தொண்டர்களது சரித்திரமாகிய பெரியபுராணமும், பொருள் தறம் நோக்கும் - பொருளினது தன்மையை விரும்பும், மன் ஐயாத்துரையின் பொருப்பதனில் - பெருமை வாய்ந்த ஐயாத்துரையென்னும் சீமானது மலையின்கண்ணே, தெருள் தரும் ஆகிரி சங்காபூடணம் செப்பிடு என்றால் - தெளிவைத் தருகின்ற ஆகிரிராகமும் சங்கராபரணராகமும் சொல்லென்றால், சுருட்டியும் மோகனம் சொல்லிவிட்டாய் அடி தோகையரே - சுருட்டிராகமும் மோகனராகமும் சொல்லிவிட்டாய் அடி மயில்போன்றவளே, எ-று.

மாகிரி - பெரிய மலைக்கொப்பாகிய முலை. சங்கராபரணம்-பாம்பு (அல்குல்). சுருட்டியு மோகனம் சொல்லிவிட்டாய் - சுருளாக்ச் சுற்றியோ மேகம் போன்ற கூந்தலைச் சொல்லிக்கொடுத்தாய் என்பது.

கரிய முகிலின் கொடைக்காம தேனு கனகவெற்பைப்
புரையுந் தனமுள வையாத் துரையின் பொருப்பதனில்
அரிய வுருபகத் தாளத் தினைக்கொண் டதிககன
திரிபுடை விட்டதி னற்பய னேதடித் தேமொழியே.

(இ-ள்.) கரிய முகிலின் - சூல்கொண்ட மேகம்போன்ற, கொடை - ஈகையில், காமதேனு—, கனகவெற்பை - பொன்மலையை, புரையும் நிகர்த்த தனம் உள - செல்வத்தைப்பெற்ற, ஐயாத்துரையின் - ஐயாத்துரையென்னுஞ் சீமானது, பொருப்பதனில் - மலையின்கண்ணே, அரிய உருபக தாளத்தினை கொண்டு - அரிதாகிய ரூபகதாளத்தைக்கொண்டு, அதிக கன—அதிக கனதாளமாகிய, திரிபுடை விட்டதினால் - திரிபுடைதாளத்தை விட்டதினால், பயன் ஏது - பயன் யாது, அடி தே மொழியே - அடி தித்திப்பாகிய சொல்லையுடையவளே, எ-று.

அரிய - அரிதாகிய, உரு - பெரிய, பகம் - அல்குல். தாளம்-தனம். திரிபுடை - மூன்று பிரிவாக்கிப் பின்னிய கூந்தல்.

உம்பரு மேத்திடு மெம்மான் பெயரே யுறுதியென
நம்பிடு மையாத் துரைராஜ தீர னகமலையாய்
வம்புறு ரோமர் துவண்டிங் கிருக்க மகிமைமிகு
கும்பரு மச்சரும் பாம்பாட் டியுமெங்கு கூறுவையே.

(இ-ள்.) உம்பரும் ஏத்திடும் - பூவுலகத்தவரன்றி தேவர்களும் நமஸ்கரிக்கும், எம்மான் பெயரே - எமது கடவுளாகிய சிவபெருமானது நாமத்தையே, உறுதி என - உண்மையென, நம்பிடும் - நம்பாநின்ற, ஐயாத்துரை ராஜதீரன்—, நகமனையாய் - மலையையொப்பானவளே, வம்புறு ரோமர் துவண்டு இங்கு இருக்க - வீம்புகொண்ட ரோமர் இங்கு துவண்டிருக்க, மகிமை மிகு - மகிமை மிக்க, கும்பரும் - அகஸ்தியரும், மச்சரும் - மச்சநாதரும், பாம்பாட்டியும் - பாம்பாட்டிச்சித்தரும், எங்கு—, கூறுவை - சொல்லுவாய், எ-று.

ரோமர் - அளகபாரம். கும்பர்-தனங்கள். மச்சர் - கண்கள். பாம்பாட்டி-அல்குல். (௭௦)

பூதி நுதலணி சுந்தரன் சேமனைப் போற்றுதல்செய்
நீதி யமைந்தநல் லையாத் துரையி னெடுங்கிரியில்
ஆதி தனங்க ளிருக்க மறைத்தரை யில்லையென
ஓதிவிட் டால்விடு வேனோ விடேனடி யொண்டொடியே.

(இ-ள்.) பூதி நுதலணி சுந்தரன்-விபூதியை நெற்றியிலணியும் சௌந்தரியன், சேமனை - பசுபதியை, போற்றுதல் செய் - தொழுகின்ற, நீதி அமைந்த-மெய்மையமைந்த, நல் ஐயாத்துரையின் நெடுங்கிரியில்-நல்ல ஐயாத்துரையென்னுஞ் சீமானது நெடிய மலையில், ஆதி தனங்கள் இருக்க - பழமையாகிய சம்பத்துக்கள் இருக்க, மறைத்து—, அரை இல்லை என - பாதி இல்லையென, ஓதிவிட்டால் - சொல்லிவிட்டால், விடுவேனோ—, விடேன்—, அடி ஒண்டொடியே - அடி ஒள்ளிய வளையலையணிந்தவளே—, எ-று.

தனங்கள் - முலைகள். அரை - மருங்கு. ஓதி - அளகபாரம். (௭௧)

அந்தத்தை மாவிளஞ் சோலைச் செறிசெண்டை யம்பதிவாழ்
கந்தத்தைக் கொண்டிடு மையாத்துரையின் கனகவெற்பில்
சந்தத்தைக் கொண்டமா மேருவின் மேலாந் தனமிருக்க
தந்தத்தைத் தாராமல் பின்னீவ தேனடித் தாழ்குழலே.

(இ-ள்.) அம் தத்தை மா இளம் சோலை செறி செண்டை அம் பதி வாழ்-அழகிய கிள்ளைகள் மருவிய மாவினது இளஞ்சோலைகள் நெருங்கிய செண்டையென்னும் அழகிய நகரில் வாழும், கந்தத்தைக் கொண்டிடும் ஐயாத்துரையின் கனகவெற்பில் - நன்மணத்தைக்கொள்ளும் ஐயாத்துரை என்னும் சீமானது பெரியமலையில், சந்தத்தைக்கொண்ட மா மேருவின் மேலாம் தனம் இருக்க - வடிவத்தைக்கொண்ட பெரிய மேருமலையினும் அதிகரித்த தனங்களிருக்க, தந்தத்தைத் தாராமல் - கொடுத்ததைக் கொடுக்காமல், பின் ஈவது ஏனடி - பின்னால் கொடுப்பது என்னடி, தாழ்குழலே - தாழ்ந்த கூந்தலையுடையவளே, எ-று.

மாமேருவின் மேலாந்தனம்-பெரிய மேருமலையினும் அதிகரித்த முலைகள். தந்தம் - பல், நகையாடல். பின்னீவது - முதுகுகாட்டல். (௭௨)

நன்னீர்மை கொண்ட வயற்செண்டை வாசனன் னாவலர்க்குப்
பன்னீர்மை செய்யுமன் னையாத் துரையின் பனிவரையீர்
சொன்னீர்மை கொண்டு பெருகிய காம சுரந்தனக்கு
வென்னீ ரளித்திள நீர்தந் திடாத விதமுநன்றே.

(இ-ள்.) நல் நீர்மை கொண்ட - நல்ல நீரின் வளப்பத்தைக்கொண்ட, வயல்செண்டை வாசன் - கழனிகள்சூழ்ந்த செண்டையில் வாசன், நல் நாவலர்க்கு-நல்ல வித்துவான்களுக்கு, பல் நீர்மை செய்யும் மன் - பலகுணங்களோடும் உபசரிக்கும் அரசன், ஐயாத்துரையின் பனி வரையீர் - ஐயாத்துரை என்னுஞ் சீமானது குளிர்ச்சிபொருந்திய மலையில் உள்ளவரே, சொல் நீர்மை கொண்டு-சொல்லும்படியாகிய சீதளங்கொண்டு, பெருகிய - அதிகரித்த, காமசுரந்தனக்கு - காமமாகிய சுரவியாதிக்கு, வென்னீர் அளித்து-சுடுநீர் கொடுத்து, இளநீர் தந்திடாதவிதம் நன்று - இளநீரைக் கொடுக்காதவகையு நல்லது, எ-று.

வென் நீர் அளித்து - முதுகை நீங்கள் கொடுத்து. இளநீர் - தனங்கள்.

குடமுனி சேய்நேர் தமிழுந் திறலுங் குடிபெறுநன்
நடைகொளு மையாத் துரைராஜ சேகர னாகமன்னீர்
வடமலைத் தானமுங் காஞ்சித் தலங்காண வாய்க்குமுனே
கடமத யானை வெருட்டி யெதிர்த்ததென் காரணமே.

(இ-ள்.) குடமுனி நேர் தமிழும் - அகஸ்தியமுனியையொப்பத் தமிழும், சேய் நேர் திறலும் - முருகனை நிகர்த்த வல்லமையும், குடி பெறும் - குடிதங்கிய, நல் நடை கொளும் - நல்ல நடக்கையைக்கொண்ட ஐயாத்துரைராஜசேகரன்—, நாகம் அன்னீர் - மலையையொப்பவரே, வடமலைத்தானமும் - வடமலையென்னும் இடத்தையும், காஞ்சித்தலம் - காஞ்சியென்னும் தலத்தையும், காண—, வாய்க்குமுன்னே - வாய்ப்பதற்கு முன்னமே, கடமதயானை - கதுப்பையும் மதத்தையும் உடைய யானை, வெருட்டி எதிர்த்தது—, என் காரணம் - என்னகாரணம், எ-று.

வடமலை தானம் - முத்துவடம் பொருந்திய மலையைப்போன்ற தானம் (முலை). காஞ்சித்தலம் - மேகலையையணிந்த அல்குல். கடு அம் மதயானை - கொடுமைபொருந்திய அழகிய மன்மதனது யானை, இருள் (அளகம்). (எசு)

மஞ்சனை யீவான் புவியுற்ற தாருகோ வைத்துறைக்குக்
குஞ்சர மும்பரி யும்பொனு மம்புவி யுங்கொடுக்கும்
ரஞ்சித மிக்கவை யாத்துரை வெற்பீர் நமக்களித்த
அஞ்சனம் பார்த்ததிற் காணுத் தனங்க ளகப்படுமே.

(இ-ள்.) மஞ்சனை ஈவான் - முகிலைப்போல் கொடுக்கும்பொருட்டு, புவி உற்ற தாரு - பூமியில்வந்த கற்பகத்தருவுக்கொப்பானவன், கோவைத்துறைக்கு—, குஞ்சரமும் - யானையும், பரியும் - குதிரையும், பொன்னும் - தனமும், அம் புவியும்-அழகிய பூமியும், கொடுக்கும் - வித்துவான்களுக்குக் கொடுக்கும்,

ரஞ்சிதம் மிக்க - பிரியம் மிகுந்த, ஐயாத்துரை வெற்பீர்-ஐயாத்துரையென்னும் பிரபுவினது மலையிலுள்ளவரே நீர், நமக்கு அளித்த - நமக்குக்கொடுத்த, அஞ்சனம் பார்த்ததில்-மையைப்பார்த்ததில், காணுத்தனங்கள் - காணுத திரவியங்கள், அகப்படும்—, எ-று.

அஞ்சனம் - இருள் (கூந்தல்). தனங்கள் - முலைகள். (௭௫)

பூவார் கீணு டிசைகொளை யாத்துரைப் பூஞ்சிலம்பில்
ஆவலர் தண்டலை கண்டன னிப்புற மப்புறநன்
ஞவ விளந்தெங்கு மாகவர் பூக நளினமலர்
மேவுந் தடமு முளவாங்கு தோயுவன் மெல்லியலே.

(இ-ள்.) பூ நாடு - பூமியாகிய உலகமும், வார் நாடு - தேவலோகமும், கீழ் நாடு - கீழுலகமும், இசை கொள் - புகழைக்கொண்ட, ஐயாத்துரை-ஐயாத்துரையென்னுஞ் சீமானது, பூ சிலம்பில் - அழகியமலையில், இப்புறம் - இப்புறத்தில், ஆவலர்-கண்டோர் வியக்க மலர்கள் மலரும், தண்டலை கண்டனன்- பூந்தோட்டங்கண்டனன், அப்புறம் - அந்தப்புறம், நல் நாவல் - நல்லநாவல் மரமும், இளந்தெங்கு - இளமையாகிய தென்னமரமும், மா - மாமரமும், கவர் - வாழைமரமும், பூகம் - பாக்குமரமும், நளினமலர் மேவும் தடமும் - தாமரை மலர்கள் பொருந்திய தடாகமும், உள-உண்டு, ஆங்கு தோயுவன் - அவ்விடத்தில் படிவேன், மெல்லியலே - மிருதுவாகிய சாயலையுடையவளே, எ-று.

தண்டலை - கூந்தல். நா - வாய். வல் - சூது (முலை). இளந்தெங்கு - இளநீர் (முலை). மா - மாவடு (கண்). கவர் - வாழை (துடை). பூகம் - கமுகு (கந்தரம்). நளினமலர் மேவுதடம் - தாமரைமலரை யொப்பாகிய அல்குல். (௭௬)

இன்னியல் வண்டமிழ் நூல்பல தேடி யினிதுடனே
பன்னியல் போங்குமை யாத்துரை செம்மல் பருப்பதத்தீர்
துன்னிய ராம னயோத்தியைக் கண்டபின் சொல்லுமரி
மன்னிய பத்திரா சலத்தினைக் காண்டல் வரன்முறையே.

(இ-ள்.) இன் இயல் வள் தமிழ் நூல் பல தேடி-இனிமையைப் பயக்கும் வளம்பொருந்திய தமிழ்நூல்களைப் பலவாகத் தேடி, இனிதுடனே - இன்பத்துடனே, பன் இயல்பு ஓங்கும் - வாசிக்கும் தன்மைவிளங்கிய, ஐயாத்துரை செம்மல் பருப்பதத்தீர்-ஐயாத்துரையென்னும் பிரபுவினது மலையிலுள்ளவரே, துன்னிய ராமன் அயோத்தியைக் கண்டபின் - நிலைபொருந்திய ஸ்ரீராமபிரானது அயோத்தியாபுரி பட்டணத்தைக் கண்டபிறகு, சொல்லும் - சொல்லப்பட்ட, அரி மன்னிய - விட்டுணு நிலைகொண்ட, பத்திராசலத்தினைக் காண்டல்—, வரன்முறை—, எ-று.

இராமன் - இருள்பொருந்திய. ஐ ஒதியை - ஐந்து பகுப்பைத்தரும் கூந்தலை. அரி - செவ்வரி, மன்னிய-பொருந்திய, பத்திரம்-அம்பு (கண்). அசலம்-மலை (முலை). (௭௭)

நெல்லார் வயல்புயல் பூம்பொழில் சூழ்சென்டை நேர்மையுளீர்
நல்லார் பரவுமை யாத்துரை வாழ்தொண்டை நாட்டதனில்
பல்லா ரிருக்கவுஞ் சூதரைக் கொண்டு பணச்செருக்கால்
அல்லாரை விட்டெனை மிக்க வருத்த லழகலவே.

(இ-ள்.) நெல் ஆர் வயல் - நெற்கள்பொருந்திய கழனிகளும், புயல் பூம் பொழில் - மேகங்கள் தவழும் பூந்தோட்டங்களும், சூழ் - சூழ்ந்த, சென்டை நேர்மையுளீர் - சென்டையினது அழகையுடையவரே, நல்லார் பரவும் - நல்லவர்கள் புகழும், ஐயாத்துரை - ஐயாத்துரையென்னும் சீமான், வாழ் - வாழும், தொண்டைநாட்டதனில் - தொண்டைநாட்டின்கண்ணே, பல்லார் இருக்கவும் - பலபேர்களிருக்கவும், சூதரைக்கொண்டு-சூதுமார்க்கமுடையவர் களைக்கொண்டு, பணச்செருக்கால் - பணத்தினது களிப்பினால், அல்லாரை விட்டு - நன்மைக்குரியவர்க ளல்லாதவரைவிட்டு, எனை மிக வருத்தல் அழ கல்ல - என்னை மிகவும் வருத்துதல் அழகல்ல, எ - று.

தொண்டைநாட்டதனில் - கொவ்வைக்கனிபோன்ற இதழ்ப்பிரதேசத் தில், பல்லார் இருக்கவும் - பற்கள் இருக்கவும், சூதரைக்கொண்டு - சூது போன்ற தனங்களைக்கொண்டு, பணச்செருக்கால் - பாம்பின் படம்போன்ற அல்குலினது செருக்கினால், அல்லாரை விட்டு - இருள்போன்ற கூந்தலை விட்டு. (எஅ)

மித்திர னென்றெவ ரும்புக லையாத் துரையின்வெற்பில்
எத்திரத் தானும் வழுவின்றி முன்னோ னெழுதிவைத்த
பத்திரங் காட்டாது வென்னிலை காட்டி பணத்தைக்கொண்டு
குத்திரஞ் செய்குவ தேன்சொலு வாயடிக் கோமளமே.

(இ-ள்.) மித்திரன் என்று - சிநேகிதன் என்று, எவரும் புகல் - எவ் வகைப்பட்டவரும் புகல், ஐயாத்துரையின் வெற்பில் - ஐயாத்துரையென்னுஞ் சீமானது மலையில், எத்திரத்தானும் - எவ்வகைப்பட்ட பலத்தினும், வழுவு இன்றி - குற்றமில்லாமல், முன்னோன்-தமையன், எழுதிவைத்த—, பத்திரம் காட்டாது - பத்திரத்தைக் காட்டாமல், வென்னிலை காட்டி-வென்னிலைப் பத் திரத்தைக் காட்டி, பணத்தைக்கொண்டு—, குத்திரம் செய்குவது என் சொலு வாய் அடி கோமளமே - வஞ்சஞ்செய்குவது என்னகாரணஞ் சொல்லுவாயடி இளமைப்பருவம் வாய்ந்தவளே, எ - று.

முன்னோன் - பிரமன். பத்திரம் - அம்பு (கண்). வென் நிலை - முதுகி னது நிலைமை. பணம் - பாம்பின் படம் (அல்குல்). (எக)

பாருவப் பத்தரு மையாத் துரையின் பனிவரைமேல்
சீருவப் போங்க வசந்தன் விழாவினைச் செய்யநல்ல
பூருவ பக்கத் திலெட்டாந் திதியுநற் பூரணையும்
நேருவ தின்றி யபாத்தின் பூரணை நேர்ந்ததுவே.

(இ - ள்.) பார் உவப்பத் தரும் - உலகமானது உவக்கும்படி கொடுக்கா நின்ற, ஐயாத்துரையின் - ஐயாத்துரை வள்ளலது, பனி வரைமேல் - குளிர்ந்த மலையின்கண்ணே, சீர் உவப்பு ஓங்க-சிறந்த மகிழ்வு அதிகரிக்க,வசந்தன் விழா வினைச் செய்ய - மன்மதனது திருவிழாவினை நடாத்த, நல்ல-நன்மையாகிய, பூருவபக்கத்தில் எட்டாம் திதியும் - சுக்கிலபக்ஷத்து அட்டமிதிதியும், நல் பூரணையும் - நல்ல பௌர்ணமியும், நேருவதின்றி - கூடுவதின்றி, அபரத்தின் பூரணை நேர்ந்தது-அபரபக்ஷத்தின் பூரணையாகிய அமாவாசை நேர்ந்தது, எ-று.

வசந்தன்விழா - மன்மதலீலை. எட்டாந்திதி - அட்டமிசந்திரன் (நுதல்). பூரணை - பூரணசந்திரன் (முகம்). அபரத்தின் பூரணை - இருட்டு (கூந்தல்).

மல்லல் கொடையிரு பத்திரண் டாவது வள்ளலெனச்
சொல்ல வுரிய புகழ்பெறு மையாத் துரைகிரிபால்
வல்ல மகிமை யுறுசொர்க்கர் தம்மைவா ளாவிடுத்து
நல்ல வமுது கடைந்திட லாமோ நறுங்குழலே.

(இ-ள்.) மல்லல் - வண்மையோடு, கொடை - ஈகைத்தன்மையில், இரு பத்திரண்டாவது வள்ளல் என - முன்னிருந்த இருபத்தோர் வள்ளலுடனே கூட்டி இருபத்திரண்டாவது வள்ளலென்று, சொல்ல உரிய - சொல்லுதற் குரிய, புகழ் பெறும் - புகழைக்கொண்ட, ஐயாத்துரை கிரிபால் - ஐயாத்துரை யென்னுஞ் சீமானது மலையின்கண்ணே, வல்ல மகிமையுறு சொர்க்கர் தம் மை-வல்லமைதங்கிய மகிமைபெற்ற தேவர்தங்களை, வாளா விடுத்து - சும்மா விடுத்து, நல்ல அமுது கடைந்திடலாமோ—, நறுங்குழலே—, எ-று.

வல் அம் மகிமை - சூதுக்காய்போன்ற அழகிய மகிமைதங்கிய, சொர்க் கர்-தனங்கள், நல்ல அம்முதுகு அடைந்திடலாமோ-நல்ல அழகு வாய்ந்த முது கின் பக்கத்தை யடையலாகுமோ. இருபத்தொரு வள்ளலாவார்:—

சூடாமணி நிகண்டு.

"மிக்கசெம் பியனே காரி விராடனே நிருதி தானுந்
தக்கதுந் துமாரி தானுஞ் சகரனே நளனுந் தாமுன்
அக்குரன் சந்தி மானே டந்திமான் சிசுபா லன்னே
வக்கிரன் கன்னன் சந்த னிடைவள்ளன் மதித்த வாறே."

"பாரியா யெழிலி நள்ளி பசுந்தொடை மலையன் பேகன்
ஓரியே கடையி லுற்றோ ருறுபொரு டண்டா தீந்தும்
வாரியி லிரந்தோர்க் கிட்டும் வளர்புகழ் துதிக்க வீந்தும்
பேரியல் வைய மெண்ணப் பெற்றனர் முப்பா லாகும்."

என்பதாலறிக. (௮௧)

அணிமுகில் வெள்க புலவர் தமக்களித் தாதரிக்குந்
திணிவளை ரையாத் துரைராஜ சேகரன் செண்டையன்னீர்
மணிவாய் திருப்பாண்டி நாட்டத னைக்கும்ப மாமுனியை
பணிவாரைக் கண்டுகொண்டால்போதும் பின்யாதுப் பன்னுவையே.

(இ-ள்.) அணி முகில்-கூட்டமாகிய மேகங்கள், வெள்க - வெட்கமடையும்படி, புலவர் தமக்கு - வித்துவான்களுக்கு அளித்து ஆதரிக்கும்-கொடுத்து உபகரிக்கும், திணிவளர்-தீரத்துவம் பொருந்திய, ஐயாத்துரைராஜசேகரன்—, செண்டையன்னீர் - செண்டையை யொப்பவரே, மணி வாய் திருப்பாண்டி நாடு அதனை - முத்துகளையுடைத்தாகிய அழகிய பாண்டியநாட்டையும், கும்ப மாமுனியை - அகஸ்தியரையும், பணிவாரை - பணிபவர்களை (தொழப்பட்டவர்களை), கண்டுகொண்டால் போதும்—, பின் யாது - மற்றவை யாது காரணம், பன்னுவை - சொல்லுவாய், எ-று.

மணிவாய் - முத்துகள்போன்ற தந்தபந்தியையுடையதும், திருப்பாண்டி-பாண்டியென்னும் அழகிய ஓர் வகைப்பண்ணை இசைப்பதாகியதுமாகிய, வாய் நாடு - வாயாகிய பிரதேசம். கும்பமுனி என்றது கொங்கைகளை. பணி - ஆபரணம். வார் - இரவிக்கை. பாண்டிநாட்டில் முத்துடைத்தென்பதை

"வேழ முடைத்து மலைநாடு மேதக்க
சோழ வளநாடு சோறுடைத்து - பூழியர்கோன்
தென்னாடு முத்துடைத்துத் தெண்ணீர் வயற்றொண்டை
நன்னாடு சான்றோ ருடைத்து."

என்பதனாலறிக. (அஉ)

மன்னுயிர் காக்குந் தயாள வரகுணன் வையகத்தில்
என்னுயிர் போன்றமன் னையாத் துரையி னிரும்பொறையீர்
துன்னிய வூருக் கிடையுள்ள தானமுஞ் சொற்றனமு
மின்னியல் போடளித் தாற்போதும் பின்பாவ தென்சொலுமே.

(இ-ள்.) வையகத்தில்-பூமியின்கண்ணே, மன்-நிலைபொருந்திய, உயிர் - உயிர்களை, காக்கும் - காக்காநின்ற, தயாள வரகுணன் - தயாளத்தோடுங் கூடிய சிறந்த குணத்தையுடையவன், என் உயிர்போன்ற - எனது உயிருக்கொப்பாகிய, மன்-அரசனாகிய, ஐயாத்துரையின்-ஐயாத்துரையென்னுஞ் சீமானது, இரும்பொறையீர்-பெரிய மலையிலுள்ளவரே, துன்னிய ஊருக்கு-நிலைபொருந்திய ஊருக்கு, இடையுள்ள தானமும் - நடுவிலுள்ள ஸ்தானத்தையும், சொல் தனமும்-சொல்லும்படியாகிய தனத்தையும், இன் இயல்போடு-இனிய குணத்துடனே, அளித்தால் போதும் - கொடுத்தால் போதும், பின்பாவது என் சொலும் - பின்பாகிய காரணம் என்ன சொல்லும், எ-று.

ஊரு - தொடை. இடையுள்ள தானம் - அல்குல். தனம் - கொங்கை. பின்பு - முதுகு. (அங)

அன்புற் றணிகொண் டருங்கவி சொல்வோ ரகமகிழ
பொன்பூண் மனைதரு மையாத் துரைமகிழ் பூஞ்சிலம்பில்
நம்பு மெனைவஞ்சஞ் செய்தே பணத்தை நனியிடுக்கி
வம்புத் தனங்கொண்டு வெண்ணிலை காட்டல் வழக்கலவே.

(இ-ள்.) அணி கொண்டு - அலங்காரத்தைக்கொண்டு, அருங்கவி சொல்வோர் - அரியகவிகளைச் சொல்லும் வித்துவான்கள், அகம் மகிழ-மனமகிழும்

படி, அன்புற்று - ஆசைகொண்டு, பொன் பூண் - பொன்னாபரணங்களும், மனை - வீடுகளும், தரும் - கொடுக்காநின்ற, ஐயாத்துரை - ஐயாத்துரையென்னுஞ் சீமான், மகிழ் - மகிழாநின்ற, பூஞ்சிலம்பில் - அழகியமலையில், நம்பும் - நின்னை நம்பிய, என்னை - என்னை, வஞ்சஞ்செய்து - வஞ்சித்து, பணத்தை - பணத்தை, நனி இடுக்கி - மிகவும் இடுக்கிக்கொண்டு, வம்புத்தனங்கொண்டு - துன்மார்க்கத்தனத்தைக்கொண்டு, வெள்ளிலை காட்டல்-வெள்ளிலைப்பத்திரத்தைக்காட்டல், வழக்கல்ல - ஞாயமல்ல, எ-று.

பணத்தை - பாம்பின் படம்போன்ற அல்குலை. நனி இடுக்கி - இரண்டு துடைகளிலும் மிகவும் இடுக்கி. வம்புத்தனங்கொண்டு - இரவிக்கையினுள் முலைகளைக்கொண்டு. வெள்ளிலைகாட்டல் - முதுகுகாட்டல். (அச)

வன்னேர் குயத்தியர் தங்கட்கு மாரற்கும் வாதுவைக்கும்
கன்னேர் புயவெழி லையாத் துரையின் கனகவெற்பில்
முன்னே தொழத்தகு யானைக்கு முன்முரு கேசர்வந்த
தென்னே வதிசயங் கண்டனன் கேட்டிலை யிக்கதையே.

(இ-ள்.) வல் நேர் குயத்தியர் - சூதுக்காய்போன்ற தனங்களையுடைய மங்கையர், தங்கட்கும் - தங்களுக்கும், மாரற்கும் - மன்மதனுக்கும், வாது வைக்கும் - வாதத்தையுண்டாக்கும், கல் நேர் - மலையையொத்த, புய எழில் - புஜ அலங்காரத்தையுடைய, ஐயாத்துரையின் - ஐயாத்துரையென்னும் சீமானது, கனகவெற்பில் - பொன்மலையில், முன்னே தொழத்தகு யானைக்கு - முதன்முதல் தொழத்தகுதியாகிய விநாயகக்கடவுளுக்கு, முன் - முன்னாக, முருகேசர் வந்தது - சுப்பிரமணியர் வந்தது, என்னே அதிசயம் - என்ன அதிசயம், கண்டனன் - கண்டேன், கேட்டிலை இக்கதை - கேட்டதில்லை இந்தச் சரித்திரத்தை, எ-று.

யானை - முலை. முரு - வாசனை, கேசர் - அளகபாரம். சய்யோகத்திற்குரித்தாகிய தனங்களை முன்பு காணமல் பின்புறத்தில் விளங்குவதாகிய அளகபாரத்தைக் கண்டது நல்ல அதிசயம் என்பது கருத்து. (அரு)

நேசத்தி லும்விசு வாசத்தி லுங்கொடை நீதியிலெத்
தேசத்தி லும்புக ழையாத் துரையின் சிலம்பிர்கும்ப
மாசத்தி லன்றியவ் வேளின் விழாவணி மன்னுதணி
கேசத்தி லுண்டோ மொழிவீ ருமக்குநல் கீர்த்தியதே.

(இ-ள்.) நேசத்திலும் - நேசத்திலும், விசுவாசத்திலும் - விசுவாசத்திலும், கொடை நீதியில் - கொடுக்கின்ற நீதியிலும், எத்தேசத்திலும் - எந்ததேசங்களிலும்; புகழ் - புகழ்கின்ற. ஐயாத்துரையின் சிலம்பிர் - ஐயாத்துரையென்னுஞ் சீமானது மலையிலுள்ளீர், கும்பமாசத்திலன்றி - மாசிமாதத்திலல்லாமல், அவ்வேளின் விழா - அந்தசுப்பிரமணியரது திருவிழா, அணி மன்னு - அலங்காரம் பொருந்திய, தணிகேசத்தில் உண்டோ - தணிகேச்சரத்திலுண்டோ, மொழிவீர் - சொல்வீர், உமக்கு நல் கீர்த்தியது-சொன்னல் உமக்கு நல் கீர்த்தியாகும், எ-று.

கும்ப மா சத்து-கும்பம்போன்ற முலைகளாகிய பெரியசத்து. வேளின் விழர் - மன்மதலீலை. தணிகேசம் - தணிந்த இந்த அளகபாரம். (அசு)

பாரி யுடனெழு மூவள்ள லும்மிந்தப் பார்புகழும்
மாரியும் வெள்கக் கொடுக்குமை யாத்துரை மன்வரைநற்
காரியங் கண்டனன் மிக்குள சீதனங் காட்டிவிட்டால்
சீரியல்.போங்குநற் சீமான் மகளெனச் செப்புவனே.

(இ-ள்.) பாரியுடன் எழு மூவள்ளலும் - பாரியுடன் எண்ணப்பட்ட இருபத்தொருவள்ளல்களும், இந்த பார் புகழும்-இந்தப் பூவுலகமானது புகழ்கின்ற, மாரியும் - மேகங்களும், வெள்க - வெட்கும்படி, கொடுக்கும் - கொடுக்கும், ஐயாத்துரை மன் - ஐயாத்துரையென்னும் அரசனது, வரை - மலையின்கண்ணே, நல் காரியம் கண்டனன் - சுபகாரியத்தைப் பார்த்தேன், மிக்கு உள சீதனம் காட்டிவிட்டால் - மிகுதியாக உள்ள சீதனத்தைக் காட்டிவிட்டால், சீரியல்பு ஓங்கும்-சிறந்த தன்மைவாய்ந்த, நல் சீமான் மகள் எனச் செப்புவன்- நல்ல தனவந்தனது மகளெனச் செப்புவன், எ-று.

காரி அம் - கருமையாகிய மேகம். மிக்குள சீதனம் - மிகுதியாகிய (பருத்த) முலை. (அஎ)

சுடலைப் பொடியணி பெம்மான் றனதுயிர்த் தோழனென்னும்
விடலைப் பொருதிரு வையாத் துரையின் விலங்கன்மின்னே
கடலை யவலை யதிரச முந்தோசைக் கனியும்விட்டு
நடலைத் தருமிந்த தேன்குழ லேதுக்கு நல்கியதே.

(இ-ள்.) சுடலை பொடி அணி பெம்மான் தனது - மயானத்திலுள்ளதாகிய விபூதியைத் தரிக்காநின்ற எம்பிரானது, உயிர் தோழன் என்னும் - உயிருக்கொப்பாகிய சிநேகிதனென்னும், விடலை பொரு திரு - ஆண்மகனாகிய குபேரனையொத்த செல்வத்தையுடைய, ஐயாத்துரையின் - ஐயாத்துரையென்னும் சீமானது, விலங்கல் மின்னே - மலையிலுள்ள மின்னலையொத்தவளே, கடலை அவலை அதிரசமும் தோசை கனியும் விட்டு—, நடலை தரும் இந்த தேன்குழல் ஏதுக்கு நல்கியது-துன்பத்தைச் செய்யும்படியாகிய இந்தத் தேன் குழலொன்றைமாத்திரம் என்னத்துக்காகக் கொடுத்தது, எ-று.

கடலை - கடல்போன்ற கண்ணை. அவலை - அந்த சூதுக்காய்போன்ற முலைகளை. அதிரசம் மூந்து ஓசை கனி - அதிக மதுரத்தோடு இசையில் முதிர்ந்த கொவ்வைக்கனிபோன்ற அதரம். தேன்குழல் - தேன்பொருந்திய கூந்தல்.

மணிவார் குழலிர தித்துணை யாகிய மாரனையே
இணையா மெனுந்தகை யையாத் துரையி னிரும்பொறையாய்
பணிவார் தமக்கு முனமே தனங்களை பாலித்துப்பின்
பணைவார் தமக்கினம் பின்போ வளிப்ப தறைகுவையே.

(இ-ள்.) மணி வார் குழல் இரதி துணை ஆகிய மாரனையே இணை - நீலநிறம்பொருந்தி நீண்ட கூந்தலையுடைய இரதிக்குத் துணைவனாகிய மன்மதனை

MARAIMALAI ADIGAL LIBRARY MADRAS-1

யே ஒப்பு, ஆம் எனும் தகை - ஆகும் என்னும் அழகுவாய்ந்த, ஐயாத்துரையின் இரும் பொறையாய் - ஐயாத்துரையென்னுஞ் சீமானது பெரியமலையிலுள்ள வளே, பணிவார் தமக்கு - பணிபப்பட்டவர்களுக்கு, முனமே - முன்னமே, தனங்களை - செல்வங்களை, பாலித்து - கொடுத்து, பின்பு அணிவார் தமக்கு - பின்பு வரப்பட்டவர்களுக்கு, இனம் - இனி, பின்போ அளிப்பது - பிறகோ (செல்வத்தைக்) கொடுப்பது, அறைகுவை - சொல்லுவாய், எ-று.

பணி - ஆபரணம். வார் - கச்சு. அணைவார் - புணர்வோர். பின்பு - முதுகு. (அக)

புரவலர் மூவ ரெனப்புல வோரைப் பொருந்தியநல்
குரவக லத்தரு மையாத் துரையின் குவடணையீர்
சிரபுரங் கண்டேன் குடந்தையுஞ் சீர்முல்லை வாயிலையுங்
கரபுர முங்கண்டு காஞ்சிப் பதியையுங் காண்குவனே.

(இ-ள்.) புரவலர் மூவர் என - சேர சோழ பாண்டியர் மூவர்களென்ன, புலவோரை - புலவர்களை, பொருந்திய நல்குரவு - பொருந்திய தரித்திரம், அகல - நீங்க, தரும் - செல்வத்தைக் கொடுக்கும், ஐயாத்துரையின் - ஐயாத் துரையென்னுஞ் சீமானது, குவடு அணையீர் மலையை யொப்பவரே, சிரபுரம் கண்டேன் - திரிசிரபுரத்தைக் கண்டேன், குடந்தையும் - கும்பகோணத்தை யும், சீர் முல்லைவாயிலையும் - சிறந்த திருமுல்லைவாயிலையும், கரபுரமும்கண்டு - விரிஞ்சிபுரத்தையுங்கண்டு, காஞ்சிப்பதியையுங் காண்குவன் - காஞ்சிபுரத்தை யுங் காண்பேன், எ-று.

சிரபுரம் - தலையினது அலங்காரம். குடந்தை - கும்பகோணம் (தனம்). முல்லைவாயில் - முல்லையரும்பையொத்த பற்கள் வாய்ந்த வாயாகிய இடம் (அதரம்). கரபுரம் - கைகளசையோகம், காஞ்சிப்பதி - மேகலாபரணம் பொருந்திய ஸ்தானமாகிய அல்குல். (கO)

அதிமது ரஞ்செயுஞ் சொல்லலங் கார வறிஞர்தமக்
கதிவித சீர்தரு மையாத் துரையி னசல மின்னே
அதிரச முந்தோசை யாமை வடையும் பதக்கவனும்
இதமுறக் கொண்டுபூ விட்டளி யேனெனக் கீந்ததுவே.

(இ-ள்.) அதி மதுரம் செயும் - அதிக இனிப்பைத் தருவதாகிய, சொல் அலங்கார அறிஞர் தமக்கு - சொல்லலங்காரத்தையுடைய வித்துவான்களுக்கு, அதிவித சீர் தரும்-பலவித சிறப்பைத்தரும், ஐயாத்துரையின் அசலமின்னே - ஐயாத்துரையென்னுஞ் சீமானது மலையிலுள்ள மின்னலை யொப்பானவளே, அதிரசமும் தோசை ஆமைவடையும் பதக்கு அவலும்—, இதம் உறக்கொண்டு - உரிமையுறக்கொண்டு, பூ இட்டளி என் எனக்கு ஈந்தது - மிருதுவாகிய இட்டளி என்னத்துக்கு எனக்குக் கொடுத்தது, எ-று.

அதிரசம் முந்து ஓசை - அதிக சுவைமுதிர்ந்த கண்டத்திலுள்ள ஓசை. ஆமை வடு ஐ-பசுவினது நெய்யாலாகிய மைபொதிந்த மாவடுபோன்ற அழகு

(கண்). பதக்கவல்லும் - பதக்கம்பொருந்திய தனமும். பூ இட்ட அளி - புஷ்பங்களணிந்த வண்டுபோன்ற கூந்தல். (கக)

சங்கொடு பேரிகை பூரிகை மற்றியந் தாமகலா
மங்கல மோங்குநற் றொண்டையிற் செண்டை மணிநகர்வாழ்
இங்கித வையாத் துரைராஜ வேளி னிரும்பொறையீர்
அங்குச மின்றி மதயானை யீந்த தறமலவே.

(இ-ள்.) சங்கொடு பேரிகை பூரிகை மற்று இயம் தாமகலா - சங்கவாத்தியங்களுடனே முரசவாத்தியங்களும் ஊதும்படியாகிய பூரிகை வாத்தியங்களும் மற்றுமுள்ளனவாகிய பலவாத்தியங்களும் நீங்காத, மங்கலம் ஓங்கும் - சுபகரமோங்காநின்ற, நல் தொண்டையில்-நல்ல தொண்டைநாட்டில், செண்டை மணி நகர் வாழ் - செண்டத்தூரென்னும் அழகிய நகரில் வாழாநின்ற, இங்கித ஐயாத்துரை ராஜவேளின் இரும் பொறையீர் - அழகுவாய்ந்த ஐயாத்துரையென்னுஞ் சீமானது பெரிய மலையிலுள்ளவரே, அங்குசம் இன்றி-அங்குசமில்லாமல், மதயானை ஈந்தது - மதத்தோடுங்கூடிய யானையைக் கொடுத்தது, அறம் அல்ல - தருமம் அல்ல, எ-று.

அம் குசம் - அழகியதனம். மதன் யானை - இருள் (கூந்தல்). (கஉ)

குண்டோ தரனுக் கனமளித் தாண்மகிழ் கூத்தனடி
கண்டோதி வந்தமன் னையாத் துரையின் கனகவெற்பில்
கண்டோ வெனுமொழி மானினி சந்தனங் காணுமுனே
வண்டோதி விட்டது நன்மைய தோசொலும் வாய்திறந்தே.

(இ-ள்.) குண்டோதரனுக்கு அன்னம் அளித்தாள் மகிழ் கூத்தன் அடி - குண்டோதரனென்னும் பூதனுக்கு அன்னம் படைப்பித்தவளாகிய அங்கயற்கண் அம்மையார் மகிழாநின்ற வெள்ளியம்பலக் கூத்தனாகிய சோமசுந்தரக்கடவுளினது பாதங்களை, கண்டு ஓதி வந்த மன் - கண்டும் நாவாற்றுதித்தும் வந்த மன்னனாகிய, ஐயாத்துரையின் கனகவெற்பில் - ஐயாத்துரையென்னுஞ் சீமானது பொன்மலையில், கண்டோ என்னும் மொழி மானினி - கற்கண்டோவென்னுஞ் சொல்லையுடைய பெண்ணே, சந்தனம் காணுமுன்னே - தாதுக்குரிய அன்னமானது காண்பதற்குமுன்னமே, வண்டு ஓதிவிட்டது - வண்டானது சொல்லிவிட்டது, நன்மையதோ-நல்லதோ, வாய்திறந்து சொல்லும் - வாயைத்திறந்து சொல்லுவாய், எ-று.

சம் தனம் - அழகிய தனம். வண்டு ஓதி - வண்டுக்கு ஒப்பாகிய கூந்தல். (கங)

மதியும் புன்லணி நாதன் பெயருமுவர்கள் சொலுநற்
பதிகமு மோதுமன் னையாத் துரையின் பருப்பதத்தீர்
அதிரச முந்தோசை கச்சூர முமபணி யாரமுடன்
பொதியுங் குடங்கொண்டு தேன்குழ லீந்தப் புதுமைநன்றே.

(இ-ள்.) மதியும் புனல் அணி நாதன் பெயரும்-சந்திரனையும் கங்கையையும் சடாடவியிலணிந்த சிவபிரானது பெயராகிய பஞ்சாக்கரமும், மூவர்கள் சொல்லும் நல் பதிகமும் - சம்பந்தமூர்த்திநாயனர் திருநாவுக்கரசுநாயனர் சுந்தரமூர்த்திநாயனர் இவர்கள் திருவாய்மலர்ந்தருளிய நன்மையாகிய திருப்பதிகங்களும், ஓதும் - பாராயணம் செய்யாநின்ற, மன் - அரசனாகிய, ஐயாத்துரையின் - ஐயாத்துரையென்னும் பிரபுவினது, பருப்பதத்தீர் - மலையின் கண் உள்ளவரே, அதிரசமும் தோசை கச்சூரமும் பணியாரமுடன் பொதியும் குடம் கொண்டு - அதிரசம் தோசை கஜ்ஜூரம் பணியாரங்கள் பொருந்திய குடத்தைக்கொண்டு, தேன்குழல் ஈந்த புதுமை நன்று - தேன்குழல் ஒன்றை மாத்திரம் கொடுத்த புதுமையானது நல்லது, ஏ - அசை. எ-று.

அதிரச முந்து ஓசை - அதிகமதுரம் முதிர்ந்த சொல்லாகிய ஓசை. கச்சு ஊர் அம்மும் - இரவிக்கைபொருந்திய அழகும். பணி ஆர் அம்மும் - ஆபரணங்கள் அணிந்த அழகும். பொதியும் குடம் கொண்டு - பொருந்திய குடம் போன்ற தனங்களைக்கொண்டு. தேன் குழல் - மலர்களினது தேன்பொருந்திய கூந்தல். (கச)

வெண்ணிற மூரலும் பாகுங் கனியும் விழைகரும்பும்
தண்ணிய பாலின் குடம்வைத் திருந்துமித் தாரணியில்
புண்ணிய னென்றுசொ லையாத் துரையின் புகழ்ச்சிலம்பில்
கண்ணிய கூழை யளித்தது மெந்தனற் கைதவமே.

(இ - ள்.) இத்தாரணியில் - இந்த பூலோகத்தில், புண்ணியன் என்று சொல் - புண்ணியனென்று சொல்லப்படுகிற, ஐயாத்துரையின் - ஐயாத்துரையென்னுஞ் சீமானது, புகழ் சிலம்பில் - புகழ்வாய்ந்த மலையின்கண்ணே, வெண்ணிறமூரலும் - வெள்ளிய சாதமும், பாகும் - சர்க்கரைப்பாகும், கனியும் - முக்கனிகளும், விழை கரும்பும்-யாவர்களும் இச்சியாநின்ற கன்னலும், தண்ணிய பாலின் குடம் - குளிர்ச்சிபொருந்திய பாற்குடங்களும், வைத்திருந்தும் - வைத்துக்கொண்டிருந்தும், கண்ணிய கூழை-காந்தலாகியகூழை, அளித்ததும் - கொடுத்ததும், எந்தன் நல் கைதவம் - எனது நல்ல துன்பம், ஏ-ஓ பெண்ணே, எ-று.

மூரல் - நகை. பாகு - பாகுபோன்ற சொல். கனி - அதரம். கரும்பு - தோள். பாலின்குடம் - தனம். கூழை - கூந்தல். (கரு)

பாளித சந்தன தாம்பூல முந்தமிழ்ப் பாவலர்க்குக்
கேளித மாகவென் னளும் வழங்குநற் கீர்த்தியன்செவ்
வேளிணை யையாத் துரைவரை யீர்தன மிக்குளதால்
சாளிகைத் தந்தி ரெனக்கினி யேதுத் தரித்திரமே.

(இ-ள்.) பாளிதம் - பாலன்னமும், சந்தனம் - சந்தனமும், தாம்பூலம் - தாம்பூலமும், தமிழ் பாவலர்க்கு - தமிழ் வித்துவான்களுக்கு, கேளிதமாக -

மதிப்பாகிய உரிமையோடு, என்றுளும் - எக்காலத்திலும், வழங்கு - வழங்கு கின்ற, நல் கீர்த்தியன்-நல்ல கீர்த்தியுடையவன், செவ்வேளிணை-சுப்பிரமணி யரையொத்த, ஐயாத்துரை வரையீர் - ஐயாத்துரை யென்னுஞ் சீமானது மலையிலுள்ளவரே, தனம் மிக்குளதால் - செல்வம் அதிகரித்திருப்பதினால், சாளிகை தந்தீர் - பணப்பையை எனக்குக் கொடுத்தீர், எனக்கு இனி ஏது தரித்திரம் - இனி எனக்கு என்ன தரித்திரம், எ - று.

தனம் - முலை. சாளிகை - வண்டு (அளகம்). (௬௬)

நாரங்கொள் வேணிப் பெருமா னருள்போ னதிபதிசூழ்
பாரெங்கு மேம்புகழ் கொண்டவை யாத்துரை பாதவத்தில்
சாரங்கங் கண்டது போலமற் றாயுதந் தம்மைக்கண்டால்
சிரங்க நாயக ரென்றணங் கேயுனைச் செப்புவனே.

(இ-ள்.) நாரம் கொள் வேணி பெருமான் அருள்போல்-கங்கை பொருந் திய சடாபாரத்தையுடைய சிவபிரானது அருளைப்போலே, நதிபதி சூழ்-சமுத் திரம் சூழ்ந்த, பார் எங்கும்-பூவுலகமெங்கும், மேம் புகழ் கொண்ட-மேன்மை யாகிய புகழைப்பெற்ற, ஐயாத்துரை பாதவத்தில் - ஐயாத்துரையென்னுஞ் சீமானது மலையின்கண்ணே, சாரங்கம் கண்டதுபோல - சாரங்கம் என்னும் வில்லைக் கண்டதுபோல, மற்ற ஆயுதம் தம்மை - மற்ற ஆயுதங்களையும், கண் டால்—, சீரங்க நாயகர் என்று அணங்கே உனை செப்புவன் - ஸ்ரீரங்கநாயகரெ ன்று உன்னைச் சொல்லுவேன், ஏ-தெய்வப்பெண்ணை யொப்பானவளே, எ-று.

சாரங்கம் - வண்டு (கூந்தல்). மற்றாயுதங்களாவன-சங்கு (கழுத்து). சக் கரம் (வட்டவடிவாகிய முலை). கட்கம் (வாள்போன்ற கண்கள்). தண்டு (வாழைத்தண்டுபோன்ற தொடை). (௬௭)

தெளிவந்த கல்வியிற் சேட னிலையிற் றிரியெனுஞ்சங்
கொளிவந்த சேய்நிக ரையாத் துரைதன தோங்கலிறண்
அளிவந்த தாலிந்த வேளையில் வாட்டு மரும்பசிக்குக்
களிவந்த தத்தொடு மோதனந் தானுமென் கைவருமே.

(இ-ள்.) தெளி வந்த கல்வியில் சேடன் - தெளிவு பொருந்திய கல்வி யிலே ஆதிசேடனுக் கொப்பானவன், நிலையில் திரி எனும் சங்கு ஒளிவந்த சேய் நிகர் - சத்தியத்தில் திரிச்சங்குவினது ஒளிவுபொருந்திய குமாரனாகிய அரிச்சந்திரனை யொப்பாகிய, ஐயாத்துரை தனது ஓங்கலில் - ஐயாத்துரை யென்னுஞ் சீமானது மலையில், தண் அளி வந்ததால் - குளிர்ந்த கருணை வந்த தால், இந்த வேளையில் - இந்த காலத்தில், வாட்டும் - வாட்டுகின்ற, அரும் பசி க்கு - அரியபசிக்கு, களிவந்தது—, அத்தொடும்-அதினுடன், ஓதனம் தானும் என் கை வரும்-சாதமும் தானாகவே என்கைவரும், ஏ-ஓ பெண்ணரசி, எ-று.

தண் அளி - குளிர்ச்சி பொருந்திய வண்டையொத்த கூந்தல். அரும் பசி - காமப்பசி. களிவந்தது - களிப்பு வந்தது. அத்தொடுமோ - அத்துடனே யோ. தனம் என் கைவரும் - முலையும் என்கை பொருந்தும். (௬௮)

கரியமைப் போல்பொழி கைத்தலத் தானிந்தக் காசினியோர்
பிரிய முறுதகை யையாத் துரையின் பிறங்கலன்னீர்
வரியிசை யொண்பொருள் கண்டனன் செய்யுள் வகையுங்கண்டால்
பரிவொடு தண்டி யலங்கார மோதிடப் பக்குவமே.

(இ-ள்.) கரிய மைபோல் பொழி கைத்தலத்தான் - சூல்கொண்டு கருத்த முகிலையொப்பப் பொன்னைப் பொழியாநின்ற கரதலத்தையுடையவன், இந்த காசினியோர் பிரியமுறுதகை - இந்த வுலகத்தார் யாவர்களும் ஆசைகொள்ளும், ஐயாத்துரையின் பிறங்கலன்னீர் - ஐயாத்துரை யென்னுஞ் சீமானது மலைக்கு ஒப்பானவரே, வரி இசை ஒண் பொருள் கண்டனன் - எழுத்து சொல் பொருள் என்னும் இலக்கணங்களைக் கண்டேன், செய்யுள் வகையும் கண்டால் - யாப்பு இலக்கண வகையையுங் கண்டால், பரிவொடு - அன்போடு, தண்டியலங்காரம் ஓதிட பக்குவம் - தண்டியலங்காரமென்னும் அலங்கார சாத்திரத்தைப் படிப்பதற்குப் பக்குவம், எ - று.

வரி இசை ஒள் பொருள் - வண்டுகள் சத்திக்கின்ற ஒளிபொருந்திய கூந்தல். செய்யுள் வகை - மேகலாபரணத்தினால் அலங்கரிக்கப்பட்ட அல்குலினது வகை. தண்டியலங்காரம் ஓதியிட - கோசத்தினது அலங்காரத்தைச் சொல்லி இடுவதற்கு. (கக)

தாரக மான பரப்பிர மம்பொலித் தாரணியில்
ஊரக வண்கொடை யையாத் துரையி னுயர்கிரிபால்
சீரக ரேசகம் போற்றிருக் கும்பகந் தேருமுனே
பூரக மோதித் தெரிவித்த தெந்தனற் புண்ணியமே.

(இ-ள்.) தாரகமான - பிரணவமான, பரப்பிரமம்போல் - பரப்பிரமத்தைப்போல, இத்தாரணியில் - இந்தப் பூலோகத்தில், ஊர் - சூழ்ந்த, அகவண்கொடை - மனதினாலே எண்ணித் தருவதாகிய வளப்பமிக்க ஈகையையுடைய, ஐயாத்துரையின் உயர்கிரிபால் - ஐயாத்துரையென்னும் பிரபுவினது உயர்ந்த மலையினிடத்தே, சீர் அக - சிறந்த ஸ்தானத்திலிருந்து, ரேசகம் - பிராணவாயுவை விடுவதாகிய ரேசகமும், போற்றிரு கும்பகம் - மேலோராலே போற்றப்படுவதாகிய பிராணவாயுவைச் சமப்படுத்தி யடக்குவதாகிய பெரிய கும்பகமும், தேருமுன்னே - அறிவதற்கு முன்னமே, பூரகம் ஓதி - மூச்சையுள்ளே வாங்குவதாகிய பூரகத்தைச் சொல்லி, தெரிவித்தது எந்தன் நல் புண்ணியம் - தெரிவித்தது எனது நல்ல புண்ணியம், எ-று.

ஐயாத்துரையின் உயர்கிரியில் சீர் அகரே - ஐயாத்துரையென்னுஞ் சீமானது உயர்ந்த மலையின்கண்ணே சிறந்த இடத்தை யுடையவரே, சகம்போற்ற இருக்கும் - உலகம் மதிக்க இருக்கும், பகம் - அல்குல், தேருமுன்னே - அறிவதற்குமுன்னே, பூரகம் - பூக்களினது ரகங்களை (வகைகளை) யுடைய, ஓதி - கூந்தலை, தெரிவித்தது—, எந்தன் நல் புண்ணியம் - எனது நல்ல புண்ணியம்.

எண்டோ ளானது தோழனென் றேதன மீட்டிபுகழ்
கொண்டோ னெனச்சொலே யாத்துரைக் கோமகன் குன்றதனில்
உண்டோ படிதற் கெனவின வேற்குறை யாமலிந்த
வண்டோதி யோதெரி விக்குஞ் சரோருக வாவியையே.

(இ-ள்.) எண்டோள் - எட்டுத் தோள்களையுடைய, அரனது தோழன் என்றே - சிவபிரானது தோழனாகிய குபேரனே என்ன, தனம் ஈட்டி-தனத்தைச் சம்பாதித்து, புகழ் - புகழை, கொண்டோன் என - சம்பாதித்தவனென்று, சொல் - யாவர்களும் சொல்லாநின்ற, ஐயாத்துரை கோமகன் - ஐயாத்துரையென்னும் சீமானது, குன்று அதனில் - மலையின்கண்ணே, படிதற்கு உண்டோ என - குளித்தற்கு இடம் உண்டோ என்ன, வினவு எற்கு - கேட்கும் எனக்கு, உரையாமல் - பதில் உத்திரம் நீ சொல்லாமல், இந்த வண்டு ஓதியோ தெரிவிக்கும் - இந்த வண்டு சொல்லியோ தெரிவிக்கும், சரோருக வாவியை - தாமரைத் தடாகத்தை, எ-று,

வண்டு ஓதி - வண்டைப்போன்ற கூந்தல். தாமரைத் தடாகம் - அல்குல்.

கரிய திருமா லினைத்துதி யாவணங் காட்டிநமக்
குரியவி லிங்கத் தரிசனந் தந்திடி லும்மைவிடைப்
புரியாதி சைவரென் றாரணங் கீர்நனி போற்றுவன்புன்
தரியா ரரியென யாத்துரைக் கோன்மலைச் சாரலிலே.

(இ-ள்.) கரிய - கறுத்த நிறமாகிய, திருமாலினை - மகாவிட்டுணுவை, துதியாவண்ணம் - தொழாதவகை, காட்டி - காட்டி, நமக்கு உரிய - நமக்குப் பொருந்திய, லிங்கதரிசனம் தந்திடில் - சிவலிங்க தரிசனம் தந்தால், உம்மை - உம்மை, விடைப்புரி-நந்திகிராமத்திலுள்ள, ஆதிசைவரென்று—, ஆர் அணங்கீர் - பொருந்திய தெய்வப்பெண்போன்றவரே, நனி போற்றுவன் - மிகவும் போற்றுவன், புன் தரியார் அரியென் - அற்பராகிய பகைவர்களுக்குப் பகைவனென்னும், ஐயாத்துரை கோன் - ஐயாத்துரையென்னுஞ் சீமானது, மலைச் சாரலில்—, எ-று.

கரிய திருமால் - கறுத்த அழகிய மேகம் (கூந்தல்). இலிங்கம் - குயம். கூந்தலைக் காட்டாமல் தனத்தைக் காட்டினால் லீலைக்குப் பதிலுத்தாஞ் சொல்லாமல் இசைவீர் என்று மதிப்பேன் என்பது கருத்து. (கoஉ)

கதம்பத் தொடைபுனை யாறிரு திண்புய காங்கெயனை
நிதம்பத்தை யாயிர மோதுமை யாத்துரை நீள்கிரியில்
சதம்பத்து மொன்றுமுன் காணியு மாறிய தன்மைகண்டேன்
நிதம்பத்தை யீந்துபின் கூட்டுதல் காட்டிடு நேரிழையே.

(இ-ள்.) கதம்பத்தொடை புனை ஆறு இரு திண் புய காங்கெயனை-கடப்பமாலையை அணியாநின்ற பன்னிரண்டு திண்ணிய புயங்களையுடைய சுப்பிர

மணியக்கடவுளை, நிதம் - தினந்தினமும், பத்து ஐயாயிரம் ஓதும் - பதினையாயிரந்தரம் ஓதாநின்ற, ஐயாத்துரை நீள்கிரியில் - ஐயாத்துரையென்னுஞ் சீமானது நெடியமலையில், சதம் பத்தும் ஒன்றுமுன்-ஆயிரம் ஒன்று என்னும் இலக்கங்களின்முன், காணியும்மாறிய-காணியென்னும்இலக்கத்தை மாறிய, தன்மை கண்டேன்—, நிதம் பத்தை ஈந்து - தினமும் பத்தைக்கொடுத்து, பின்-பிறகு, கூட்டுதல் காட்டிடு - கூட்டல் வகையைக் காட்டிடு, நேரிழையே—, எ-று.

சதம் பத்து - ஆயிரம் (த). ஒன்று (க). காணி (ჲ). தகரத்திற்கும் ககரத்திற்கும் முன்பாக மகரம் நிற்க, மூன்றும் மதக. இவைகளில் உகரம் ஏறினால் முதுகு. எனவே, நான் முதுகைக் கண்டேன், இனி நிதம்பம் என்னும் அல்குலைக் கொடுத்து நீ என்னுடன் உடன்பாட்டுக்கு வழிகாட்டுவாய் என்பது கருத்து. (கOஙு)

அதிகம் மினிய தமிழ்வாணர்க் கம்பொ னளித்தவர்சொல்
பதிகங் கொளும்புக ழையாத் துரையின் பருப்பதநேர்
முதுகுன்றந் தன்னிலு ரோமரைக் கண்டு முருகலரம்
பொதிகையிற் கும்பரை பற்றிக் குதம்பையைப் போற்றுவனே.

(இ-ள்.) அதிகம் இனிய - அதிக மதுரமாகிய, தமிழ் வாழ்நருக்கு - வித்வான்களுக்கு, அம் பொன் அளித்து - அழகிய பொன்னைக் கொடுத்து, அவர் சொல்பதிகம் கொள்ளும் புகழ்-அவ்வித்துவான்கள்சொல்லும் பாக்களைக் கொள்ளும் புகழையுடைய, ஐயாத்துரையின்—, பருப்பதம் நேர் - மலையையொப்பாகிய, முதுகுன்றம் தன்னில் - விருத்தாசலத்தில், உரோமரைக்கண்டு-உரோமரிஷியைக்கண்டு, முருகு அலர் அம்-வாசனைபொருந்திய பூக்களினது அழகைத்தருவதாகிய, பொதிகையில் - பொதிகைமலையின்கண்ணே, கும்பரை பற்றி - அகஸ்தியரைக்கொண்டு, குதம்பையை - குதம்பைசித்தரை, போற்றுவன்—, ஏ-பெண்ணே, எ-று.

முதுகு உன்தம் என்பதை உன்தம் முதுகு என திரித்துக்கொள்க. உரோமர் - கூந்தல். முருகு அலர் அம் பொதி கையில் - வாசனைபொருந்திய மலர்போன்ற அழகுவாய்ந்த கையில், கும்பரை பற்றி - தனங்களைப் பிடித்து. குதம்பை - நிதம்பம். (கOச)

சீரிரண் டாகிய கற்பகந் தேனுசிந் தாமணியாம்
பேருறுஞ் செண்டையி லையாத் துரையின் பிறங்கலன்னீர்
ஓரிரண் டேறிய காணி சகத்திர மொன்றுகண்டேன்
ஈரைக் காணியோ ராயிர மாவையு மெய்துவனே.

(இ-ள்.) சீர்-சிறப்புவாய்ந்த, இரண்டாகிய கற்பகம்-(இந்திரனதுஉடைய தோடு) இரண்டென்று சொல்லும் கற்பகம், தேனு சிந்தாமணி-அத்தகைய காமதேனு சிந்தாமணி, ஆம்-ஆகிய, பேர் உறும்-பேரைக்கொண்ட, செண்டையில் ஐயாத்துரையின் - செண்டத்தூரின்கணுள்ள ஐயாத்துரையென்னுஞ் சீமா

னது, பிறங்கல் அன்னீர் - மலையையொப்பவரே, ஓரிரண்டு ஏறிய காணி சகத்திரம் ஒன்று கண்டேன்—, ஈரரைக்காணி ஓர் ஆயிரம் மாவையும் எய்துவன்—, எ-று.

ஓர் இரண்டு (உ) உகரம். காணி (ஐ) மகரம். சகஸ்திரம் (த) தகரம். ஒன்று (க) ககரம். எனவே உகரமேறிய மகர தகர ககரங்களை கண்டேன் (முதுகுகண்டேன்). ஈர் அரைக்காணி-காணி (ஐ) மகரம். ஆயிரம் (த) தகரம். மா-ஒருமா (ஐ) மதமா-(யானை-முலையையும்), மது ஆம் மா-வண்டையும் அழகிய மாம்பிஞ்சையும்போன்ற கண்களையும்,எய்துவன் என்று பொருள்கொள்க.

புட்கருங் கோல மறியாப் புனைமுடிப் பூமலர்த்தாள்
நக்கன் றுணைவன் பொருவுமை யாத்துரை நாகமன்னீர்
சிக்க விலாத முதுகலை தேர்ந்தன்முக் கோணமெனும்
சக்கரங் காட்டிடில் பீசத்தை நாட்டுஞ் சமர்த்தியனே.

(இ-ள்.) புள் கருங்கோலம் அறியா புனை முடி பூ மலர் தாள்-அன்னமாகிய பறவையும் கரிய விட்டுணுவாகிய ஏனமும் அறிதற்கு அரிய அலங்கரிக்கப்பட்ட முடியையும் அழகிய மலர்போன்ற பாதங்களையும் உடைய, நக்கன் - சிவபிரானது, துணைவன் பொருவும் - குபேரனையொத்த, ஐயாத்துரையின்—, நாகம் அன்னீர் - மலையையொப்பவரே, சிக்கல் இல்லாத - தவறுதல் இல்லாத, மூது கலை - பழயசாத்திரங்கள், தேர்ந்தன் - தேர்ந்தேன் ஆதலின், முக்கோணம் என்னும் சக்கரம் காட்டிடில்—, பீசத்தை நாட்டும் சமர்த்தியன் - நான் பீஜாக்ஷரத்தை அச்சக்கரத்தில் அடைக்கும் சாமர்த்தியம் உடையவன், எ-று.

சிக்கல் இல்லாத முதுகு அல்லை-சிக்குதல் இல்லாத முதுகின் பக்கமாகத் தொங்கும் இருட்டுபோன்ற கூந்தலை. முக்கோணசக்கரம் - நிதம்பம். பீஜம் - கோசம். (கoகூ)

கொக்கரை நெஞ்சிற் றுதகி செஞ்சடைக் கொண்டணியும்
நக்கரைப் போற்றுமை யாத்துரைக் கோமக னாகமதில்
சக்கரைக் காட்டிவல் லோதன முங்கையிற் றந்திடினுன்
சொக்கரைக் கண்டுபின் பாலரைக் காண்குவன் றோகையரே.

(இ-ள்.) கொக்கரை நெஞ்சில்-பாம்பை மார்பிலும், தாதகி செம் சடை-ஆத்திமாலையைச் செவந்தசடையின்கண்ணும், கொண்டு அணியும்—, நக்கரை போற்றும்-சிவபிரானைப்போற்றும், ஐயாத்துரைக் கோமகன் நாகமதில்-ஐயாத்துரையென்னுஞ் சீமானது மலையின்கண்ணே, சக்கரைகாட்டி—, வல் ஓதனமும் கையில் தந்திடில்-சீக்கிரமாக அன்னத்தையும் கையில்கொடுக்கில், நான்—, சொக்கரைக்கண்டு—, பின்—, பாலரை - குமாரக்கடவுளை, காண்குவன்—, தோகையரே—, எ-று.

சக்கு அர் - கண்கள். வல் - கச்சு. ஓ-அசைநிலை தனம் - முலை. சொக்கு அரை - அழகிய அல்குல். பின் பாலர் - பின்புறமாகிய கூந்தல். (கoஎ)

மாமங் களகர ஞவலர் நன்கு வனைதமிழ்பாத்
தாமம் புனைபவ னையாத் துரையின் றடங்கிரிபால்
தூமங் கருங்குழன் மாதே பசுநறை தோயுமலர்த்
தாமங்கொண் டையறிந் தேன்மற்றச் செண்டைத் தருகுவையே.

(இ-ள்.) மாமங்களகரன் - பெரிய மங்களகரத்தையுடையவன், நாவலர்- வித்துவான்கள், நன்கு வனை-அலங்காரத்துடன் இயற்றிய, தமிழ் பா தாமம் - தமிழ்பாமாலை, புனைபவன் - அணியும்படியாகியவன், ஐயாத்துரையின் தடங் கிரிபால்—, தூமம் கருங்குழல் மாதே - இருட்டுக்கொப்பாகிய கரிய கூந்தலை யுடைய பெண்ணே, பசும் நறை தோயும்-பசியதேன் பொருந்திய, மலர் தாமம் கொண்டை - மலர்மாலையைக் கொண்டாய், அறிந்தேன் - அதை அறிந்தேன், மற்று அச்செண்டை தருகுவை - மற்றுமுள்ள அந்த செண்டைத் தருவாயாக, எ-று.

கொண்டை - ஐம்பாலிலொன்று. செண்டு - முலை. (கலஅ)

ஒருதுறைக்கோவை மூலமும் உரையும்

முற்றுப்பெற்றன.

சிவமயம்.

ஒருதுறைக்கோவையின்.

செய்யுள் முதற்குறிப்பகராதி.

செய்யுள்.	பக்கம்.
அ	
அகரத்தை	௨௧
அணிமுகல்	௩௯
அதிகம் மினிய	௬௯
அதிமதுரஞ்	௬௦
அந்தத்தை	௩௦
அருட்டிரு	௩௧
அறவாழி	௯
அன்பாவினிய	௨௯
அன்புற்றணி	௩௭
அன்றாலிருந்	௬
ஆ	
ஆதியம்பிகை	௫
ஆலையின்றீம்புன	௧௯
இ	
இன்னியல்	௩௬
உ	
உம்பருமேத்திடு	௩௧
உரங்காட்டு	௨௮
உவாடுநீரார்	௨௩
எ	
எண்டோளா	௬௫
ஏ	
ஏற்பார்தமக்	௨௯
ஒ	
ஒருவாப்பெரும்	௧௬
ஒளியார்மதியு	௨௦
க	
கஞ்சலசல	௫
கதம்பத்தொடை	௬௫
கதுவாப்பெரு	௧௯
கரியதிருமாலினை	௬௫
கரியமுகிலின்	௩௧
கரியமைப்போல்	௪௪
கரும்பலதில்லா	௧௩
கனம்படைத்	௭
கா	
காருறுசோலை	௧௧
கீ	
கீரம்மதித்திட்ட	௨௦
கு	
குடமுனி	௩௩
குண்டோதர	௬௧
குருகார்வயற்	௫
கெ	
கெட்டாரைத்	௧௫
கொ	
கொக்கரை	௬௭
கோ	
கோதில்வாய	௯
ச	
சங்கொடுபேரிகை	௬௧
சரிகமபதநி	௨௪
சா	
சாரிகைக்கொண்ட	௧௨
சீ	
சீதம்பயிலு	௨௩
சீரிரண்டாகிய	௬௯
சு	
சுடலைப்பொடி	௩௧
சுதியொன்று	௧௨
சுபசோபனங்க	௨௫
சுருப்பண்ணல்	௨௦
செ	
செந்தாமரை	௩
சென்றிரந்தோரை	௧௭
சே	
சேலூர்வயற்	௨௧
சொ	
சொரிகாரிருநிதி	௨௫
சொற்கடங்கா	௧௯
சோ	
சோமனைக்	௨
சோலைச்செறி	௧௦
சோலையின்மந்தி	௧௯
த	
தமதகந்தேடி	௨௮
தயாதரங்	௧௩
தா	
தாரகமான	௪௪
து	
துஞ்சாப்பெரும்புக	௨௭
துவரிதழ்	௧௮
தெ	
தெருளும்பொருளு	௧௮
தெருள்காட்டு	௧௩
தெளிவந்தகல்வி	௬௩
தெள்ளாரமுத	௩௦

செய்யுள்.	பக்கம்.
தே	
தேனையனைய	௭
தொ	
தொடிபோட்ட	௨௩
ந	
நச்சுரெயிற்றா	௨௬
நலங்கொண்ட	௬
நன்னீர்மை	௩௩
நா	
நாரங்கொள்	௪௩
நீ	
நீளத்தைக்கொண்ட	௯
நெ	
நெல்லார்வயல்	௩௫
நே	
நேசத்திலும்	௩௮
ப	
பத்தரைமாற்று	௧௪
பந்தனமாமுலை	௩௦
பா	
பாடலருமறை	௧௮
பாரியுடனெழு	௩௯
பாருவப்பத்தரு	௩௫
பாலத்திருநய	௧௭
பால்காட்டிய	௨௪
பாளிதசந்தன	௪௨
பு	
புட்கருங்கோல	௪௭
புரவலர்மூவ	௪௦
புளகாங்கிதங்	௩
பூ	
பூதிநுதலணி	௩௨
பூதியணிந்திடு	௬
பூமேவுவல்லி	௧
பூவரர்கிணை	௩௪
ம	
மஞ்சனையீவான்	௩௩
மடல்விரிதெங்	௧௫
மணிவார்குழ	௩௯
மதியும்புனலணி	௪௧
மல்லல்கொடை	௩௬
மன்னுயிர்காக்கு	௩௭
மா	
மாமங்களகா	௪௮
மி	
மித்திரனென்	௩௫
மு	
முத்திரமான	௨௨
முனமான்	௨.
மெ	
மெச்சுங்கவி	௨௮
மெச்சும்புலவர்	௧௭
மே	
மேழிக்கொடியர்	௨௯
வ	
வளங்காமருவிய	௧௯
வறந்திடுலோப	௨௬
வன்னேர்குயத்தி	௩௮
வா	
வாளங்கயற்கண்ணி	௮
வானைத்தருவினை	௨௨
வி	
விடங்காட்டு	௪
வெ	
வெண்ணிறமூராலும்	௪௨
வே	
வேணத்தைத்தந்து	௮
வேலைக்காரத்	௨௭

செய்யுள் முதற்குறிப்பகராதி முற்றிற்று.

MARAIMALAI ADIGAL LIBRARY MADRAS சென்னை